விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி21 வியாழக்கிழமை (07.11.2002) தொலைபேசி- 2223378 ஒலி 323

## திருமலையில் புலி உறுப்பினர்கள் கைதானமை துரதிஷ்டமான நிகழ்வு

### புலித்தேவன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

திருகோணமலைக் கடற்பரப்பில் கடற்படையினரால் ஆறு விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டமை துர்அதிஷ்டவசமான ஒரு சம்பவம் ஆகும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரமுகர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலைக்கடலில் விடுதலைப்புலிகள் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக யுத்த நிறுத்தக்கண் காணிப்புக் குழுவின் உபதலைவர் ஹெக்லண்ட் புலித்தேவனுடன் பேசியபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து திருகோணமலை

(10ம் பக்கம் பார்க்க)

## தனியான கரையோர மாவட்டம் அமைக்கும் முஸ்லிம்களின் கோரிக்கை நியாயமற்றது

### திருக்கோவிலில் தமிழர் கூடி தீர்மானம்

(மட்டக்களப்பு)

அம்பாறையில் முஸ்லிம் மக்களின் போராட்டங்கள் குறித்து ஆராயும் பொதுக் கூட்டம் ஒன்று நேற்றுப் பிற்பகல்3மணிக்கு திருக்கோயில இந்து மகா வித்தியாலயத்தில் திகமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு தலைமையில் நடை பெற்றது.

அம்பாறையில் முஸ்லிம் மக்களுக்கென்று தனியான கரையோர மாவட்டமும்,அதற்கென தனியான கசசேரியும் தனியலகின் அடிப்படையில் தமக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் முஸ்லிம் மக்கள் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

இப்போராட்டங்கள் குறித்து மக்களின் கருத்தை அறியும் கூட்டம் நேற்று இடம் பெற்றது.

இக் கூட்டத்தில் அம்பாறை

(10ம் பக்கம் பார்க்க)

### ஐ.தே.மு. 2வது வரவு செலவுத் திட்டம்

# அரச ஊழியர்களுக்கு ஏமாற்றம் எதிர்பார்த்த சலுகைகள் இல்லை

- ✪ சம்பள உயர்வு இல்லை.
- ✪ நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு வீடமைப்புத் திட்டம்.
- ✪ வாகனவரி மூலம் "வீதிநிதியம்" உருவாக்குதல்.
- ✪ வாகன உத்தரவுப் பத்திரம் புதுப்பிக்க 350ரூபா கட்டணம்.
- ✪ ஒவ்வொரு சர்வதேச விமான பயணத்திற்கும் தற்போதுள்ள 10 டொலர் வரிக்குமேலதிகமாக 5 டொலர் வரி அறவீடு.
- ✪ வர்த்தக வங்கிகளில் 5 லட்சம் ரூபாவைக் கடனாகப் பெற வாய்ப்பு

(நமது நிருபர்)

**அரசாங்க ஊழியர்கள் எதிர்பார்த்திருந்த சம்பள உயர்வுகள், மக்களின் வாழ்க்கைச் சுமைகளைக் குறைக்கக் கூடிய வகையிலான அறிவுப்புக்கள் எதுவும் இன்றி மக்களை ஏமாற்றமடையச் செய்யும் வகையிலான வரவு செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.**

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இரண்டாவது வரவு செலவுத் திட்டமாகவும், அரசுக்கும் விடுதலைப்

கப்பட்டது.

2003ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு சமர்ப்பித்த நிதி அமைச்

### மத்திய வங்கி குண்டு வெடிப்பு வழக்கில்

## நான்காவது எதிரிக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி மீதான குண்டுத்தாக்குதல் தொடர்பான வழக்கில், நான்காவது எதிரியான விக்கினேஸ்வரநாதன பார்த்தீபன் என்பவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுட்கால சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

மேற்படி குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக 52 குற்றச்சாட்டுக்கு 4வது எதிரி பொறுப்பாவாரென, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய தெரிவித்துள்ளார்.

1996ம் ஆண்டு ஜனவரி 31ந் திகதி மத்திய வங்கிமீது இடம் பெற்ற குண்டுத்தாக்குதல் தொடர்பாக கடந்த மாதம் 31ந் திகதி கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உட்பட நான்கு பேருக்கு 200வருடசிறைத்தண்டனை விதிக்கப்பட்டமையும் தெரிந்ததே.. (கு)

## தாளையடியில் 5209 வெடிகுண்டுகள்

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இரண்டாவது வரவு செலவுத் திட்டமாகவும், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயான சமாதான உடன் படிக்கை ஏற்பட்ட பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற முதலாவது வரவு செலவுத் திட்டமாகவும் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸியினால் சமர்ப்பிக்கப்பட்டது.

2003ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு சமர்ப்பித்த நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி சுமார் இரண்டு மணி நேரம் பாராளுமன்றத்தில் உரையாற்றினார்.

அரசுக்கும்,விடுதலைப் புலிகளுக்கும்

(10ம் பக்கம் பார்க்க)

# தாளையடியில் 5209 வெடிகுண்டுகள் நேற்று அழித்தொழிக்கப்பட்டன

(தாளையடி)

மனித நேய அமைப்புக்களின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் தாளையடியில் 5209 வெடி பொருட்கள் நேற்று அழிக்கப்பட்டன.

இந்த வெடி பொருட்கள் வன்னி, பளை, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் இருந்து கடந்த இரண்டு மாதங்களாக மீட்கப்பட்டவையாகும்.

3702 மிதிவெடிகளும்,1507 பாரிய வெடிபொருட்களுமே அழிக்கப்பட்டவையாகும். நேற்றுப்பிற்பகல் நடைபெற்ற இச்சம்பவத்தில் உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்கள், உள்நாட்டு வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் இவ்வெடி பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இந் நடவடிக்கை ''ஸ்மக்'' நிறுவனப் பிரதிநிதிகளான டொனால் டொன், மைக் ஆகியோரின் தகர்ப்பு பயிற்சி உதவியுடன் நடைபெற்றுள்ளது.

இந் நிகழ்வில் யூ.என்.சி.ஆர் யுனிசெவ் மற்றும் சர்வதேச நாட்டுப் பிரதி நிதிகளுடன் மனித நேயக் கண்ணி வெடி அகற்றும் பிரிவின் இணைப்புச் செயலாளர்

-(10ம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு கனடாவிலுள்ள சமஷ்டி முறை

## அரசும்~புலிகளும் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத தீர்வுக்கு தற்போது கனடாவில் அமுல்லில் உள்ள சமஷ்டி முறையினை இலங்கையிலும் அமுல் படுத்துவது தொடர்பாக அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகக் கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசியல் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவே

(10ம் பக்கம் பார்க்க)

# உயர் நீதிமன்றத் தீர்ப்பை கண்டித்து யாழில் நாளை மாபெரும் பேரணி

## ஏற்பாடுகள் பூர்த்தி - அனைத்து பொது அமைப்புக்களும் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனுக்கு, இலங்கை மத்திய வங்கி குண்டு வெடிப்பு வழக்கில் 200ஆண்டுகள் கடுழியச் சிறைத் தண்டனை விதித்து, வழங்கப்பட்ட தீர்ப்பைக்கண்டித்து யாழ் குடாநாட்டில் நாளை நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணிக்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாக யாழ் மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வலி வடக்கு, வலி கிழக்கு, வலி தெற்கு, வலி மேற்கு, வட மராட்சி, தென்மராட்சி, மற்றும் தீவகம் ஆகிய பகுதிகளிலிருந்து பேரணியில் கலந்து கொள்வதற்கு வரும் பொது மக்களை ஏற்றி இறக்குவதற்கு விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குடாநாட்டு மக்கள் அனைவரும் ஓர் அணியில் திரண்டு தீர்ப்பிற்கு எதிரான ஆட்சேபத்தையும், கண்டனத்தையும் வெளிப்படுத்தும் வகையில யாழ் பல்கலைக் கழக மைதானத்தில ஒன்று கூடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

மாணவர்களே!
கபொத சாதாரண தர மாதிரி வினாத்தாள் கணிதம் உள்ளே

## யாழ்ப்பாணம் - மாநகர சபை

சந்தைக் கடைகள், இறைச்சிக் கடைகள், துவிசக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2003

இதன் கீழ் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள சந்தைகள், இறைச்சிக் கடைகள் மற்றும் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை 01.01 2003 ந் திகதி முதல் 31.12.2003 வரையான ஒருவருடகாலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளராகிய என்னால் 27.11.2002ந் திகதி புதன்கிழமை பி. ப. 12.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணயில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பிணைப் பணமும் கேள்விப் படிவக் கட்டணமும் ரூபா 300/00 (பெறுமதி சேர் வரி உட்பட)வும் செலுத்துவதன் பேரில் 26 11 2002 ந் திகதி செவ்வாய்க்கிழமை பிப 3.00 மணி வரையும் யாழ் மாநகர சபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களின் இணைப் பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் பெறுபவர்கள் அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு, அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு 27 11.2002 ந் திகதி புதன்கிழமை பி.ப. 12.30 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கச்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படல்வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் 27.11 2002 ந் திகதி புதன்கிழமை பி. ப. 2.30 மணிக்கு கேள்விச்சபையினால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் சமுகமளிக்க முடியும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

1. கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும்கேள்வித் தொகையின் 50%க்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொருவங்கி உத்தரவாத முறி சமர்ப்பித்தல்வேண்டும்.
2. சந்தைகளைக் குத்தகைக்குப் பெறுபவர்கள் சந்தைக்குவரும் பொருட்களின் பெறுமதியின் மூன்று வீதத்திற்கு (3%) மேல் சந்தைவரி அறவிடக்கூடாது.
3. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கரவண்டிக்கு ருபா 2.00 வும், மோட்டார்சைக்கிளிற்கு ரூ 4.00 வுக்கும் மேலதிகமாக பாதுகாப்புக்கட்டணம் அறவிடக்கூடாது.
4. தங்களால் கோரப்படும் கேள்வித்தொகைக்கு மேலதிகமாக 20% பெறுமதி சேர்வரி (வற்) செலுத்தப்படல்வேண்டும்.
5. இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகளுக்கு விலை மதிப்புத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்பட்ட வாடகைத்தொகையை ஒவ்வொரு மாதமும் செலுத்துதல் வேண்டும்.

### அட்டவணை

| சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (பெறுமதி சேர் வரி நீங்கலாக) |
|---|---|---|
| 1. பெரியகடை மரக்கறிச் சந்தை | 5000.00 | 358000.00 |
| 2. கொட்டடி/பண்ணை மீன்சந்தை | 5000.00 | 1760000 00 |
| 3. குருநகர் சந்தை | 5000.00 | 661000 00 |
| 4. செங்குந்தா சந்தை | 5000.00 | 463500 00 |
| 5. நாவாந்துறை சந்தை | 2500.00 | 67000 00 |
| 6. பாசையூர் சந்தை | 2500 00 | 40000 00 |
| 7. புங்கன்குளம் | 2500 00 | 15000.00 |
| **துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம்** | | |
| 1. கஸ்தூரியார் வீதி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 2500.00 | 30000.00 |

| இறைச்சிக் கடைகள் | இல. | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (பெறுமதிசேர் வரி) |
|---|---|---|---|
| 1. கொட்டடி ஆட்டிறைச்சிக் கடை | .1 | 2500 00 | 28000.00 |
| 2. ,, ,, | .2 | 2500.00 | 37000 00 |
| 3. ,, ,, | .3 | 2500.00 | 39700.00 |
| 4. ,, ,, | .4 | 2500.00 | 29000 00 |
| 5. ,, ,, | .5 | 2500.00 | 23000.00 |
| 6. ,, ,, | .6 | 2500.00 | 22000.00 |
| 7. ,, ,, | .7 | 2500.00 | 40900.00 |
| 8. ,, ,, | .8 | 2500.00 | 22000.00 |
| 9. நரிக்குன்று மாட்டிறைச்சிக் கடை | .1 | 5000.00 | 171000.00 |
| 10. செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை | .1 | 2500.00 | 33300.00 |
| 11. ,, ,, | .2 | 2500.00 | 29000.00 |
| 12. குருநகர் மாட்டிறைச்சிக் கடை | .1 | 5000.00 | 128200.00 |
| 13. ,, ,, | .2 | 2500.00 | 70000.00 |
| 14. ,, ,, | .3 | 2500.00 | 85000 00 |
| 15. ,, ,, | .4 | 2500.00 | 55700.00 |
| 16. ,, ,, | .5 | 2500.00 | 52700,00 |
| 17. குருநகர் மாட்டிறைச்சிக் கடை | .6 | 2500.00 | 82500.00 |
| 18. ,, ஆட்டிறைச்சிக் கடை | .7 | 2500.00 | 9000 00 |
| 19. பாசையூர் மாட்டிறைச்சிக் | .1 | 2500.00 | 48500.00 |
| 20. ,, கடை | .2 | 2500 00 | 35500 00 |
| 21. புங்கன்குளம் ,, | .1 | 2500.00 | 25000.00 |
| 22. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | .1 | 2500.00 | 34700.00 |
| 23. ,, ,, | .2 | 2500.00 | 12000.00 |
| 24. ,, ,, | .3 | 2500.00 | 17000.00 |
| 25. ,, ,, | .4 | 2500.00 | 8000.00 |
| 26. ,, ,, | .5 | 2500.00 | 9000.00 |
| 27. ,, ,, | .6 | 2500.00 | 6000.00 |
| 28. ,, ,, | .7 | 2500,00 | 9700.00 |
| 29. ,, ,, | .8 | 2500 00 | 5500.00 |
| 30. ,, ,, | .9 | 2500.00 | 5500,00 |
| 31. ,, ஆட்டிறைச்சிக்கடை | 10 | 2500.00 | 5500.00 |
| 32. ,, கருவாட்டுக் கடை | .11 | 1000.00 | 3500 00 |
| 33. ,, ,, | .12 | 1000.00 | 3500.00 |

(8-ம் பக்கம் பார்க்க)

## கோயில் காணிகளில் குடியிருப்பு உருவாக்கம் மாநகரசபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 31ஆம் திகதி யாழ் மாநகராட்சி மன்றப் பொதுக் கூட்டத்தில், கோயில் காணிகளை அரசு சுவீகரிப்பது தொடர்பான பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்ட போது அது நிராகரிக்கப்பட்டு மாற்றுத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

மாநகராட்சிமன்ற நிர்வாகத்தினூடாக ஆலய நிர்வாகத்துடனும் உரிமையாளர்களுடனும்தொடர்புகொண்டு சட்டபூர்வமாக காணிகளை பெற்று, அரசிடம் நிதியினை கோரி அக்காணிகளில் குடியிருப்புகளை உருவாக்கி மக்களுக்கு வழங்கலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (உ)

## உள்ளூர் வியாபார பிரிவுக்கு வாகன வசதி இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் இயங்கி வரும் யாழ்ப்பாண உள்ளூர் வியாபாரப் பிரிவு வாகன வசதியின்மையால் தம்மால் முழுமையான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் இருப்பதாக தெரிவித்துள்ளது

இதனால் விலைப்பட்டியல் இல்லாமல் வியாபாரம் செய்யும் கடை உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருப்பதுடன்,

தூர இடங்களுக்குச் சென்று தமது கடமையைச் சரிவரச் செய்ய முடியாதநிலை உருவாகியிருப்பதாகவும் இப்பிரிவு தெரிவித்துள்ளது. (உ- 6)

## மக்கள் வங்கி பிரதான வீதிக்கிளை கணனிமயப்படுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மக்கள்வங்கியின் பிரதான வீதிக் கிளை நேற்றுமுன்தினம் தொடக்கம் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்கன்னாதிட்டி மக்களவங்கிக்கிளையும் தனது கணனிமயப்படுத்திய சேவையினை எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் வாடிக்கையாளருக்கு வழங்கவுள்ளது.

வாடிக்கையாளர்கள் தமது பழைய கணக்கு பதிவுப் புத்தகத்தினை கொடுத்து புதிய கணனி மயப்படுத்திய பதிவுப் புத்தகத்தைபெற்றுக்கொள்ளுமாறும் வடவலய உதவி பொது முகாமையாளர் எஸ். இளம்பிறைநாதன் கேட்டுள்ளார். (உ- 7)

## சுதந்திரஆணைகுழுக்களின் தலைவர்கள் தெரிவு

(கொழும்பு)

சுதந்திர பொலிஸ் ஆணைக்குழுத் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ரஞ்சித் அபேசூரியவும், சுதந்திர தேர்தல் ஆணைக்குழுத் தலைவராக முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி ரஞ்சித் தீரரத்னவும் பொதுச் சேவை ஆணைக்குழுத் தலைவராக முன்னாள் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஆர்.டி ஏ.வெண்டார்டும், மனித உரிமை ஆணைக்குழுத் தலைவராக ராதிகா குமாரசுவாமியும், நிதி ஆணைக்குழுத் தலைவராக பேராசிரியர் எம்.ரி.எம் ஷெரீபும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சுதந்திர பொலிஸ் ஆணைக்குழுவுக்கு 7 உறுப்பினர்களும், தேர்தல் ஆணைக்குழுவுக்கு 5 உறுப்பினர்களும், மனித உரிமை ஆணைக்குழுவிற்கு 5 உறுப்பினர்களும், நிதி ஆணைக்குழுவிற்கு 3 உறுப்பினர்களும், பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு 9 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் விபரங்கள் ஜனாதிபதியின் அனுமதிக்காக அனுப்பி வைககப்பட்டுள்ளன. (உ-3)

## அனுமதி பெறாத விடுதி உரிமையாளர்களுக்கு நல்லூர் பி. ச. எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வெளியூர் பயணிகள் தங்கிச் செல்லும் விடுதிகள் பல நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் அவதானிக்கப்பட்டுள்ளன.

சுகாதார வசதிகள் அற்ற நிலையில் இயங்கும் இவ்விடுதிகளால் நோய் பரவும் ஆபத்து இருப்பதாக நல்லூர் பிரதேச சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டுளளது.

இவ்வாறான முன் அனுமதி பெறாத விடுதி உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் எச்சரித்துள்ளார். (உ-9)

## அடகுநகைகளை மீளப்பெற இம்மாதம் வரைஅவகாசம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சிக்கிளைகளில் 1984ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன் நகைகளை அடகு வைத்து அவற்றை மீட்கத் தவறியோர்க்குமீளப்பெற மீண்டும் ஓர் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 30ஆம்திகதிக்கு முன்பாக அடகு வைத்த அதேயளவு பணத்தினை வட்டியாகச் செலுத்தி நகைகளை மீளப்பெறுமாறும்

தவறினால் நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் எனவும் மக்கள் வங்கி வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் எஸ்.இளம்பிறைநாதன் தெரிவித்துளளார். (உ-7)

# புலிகளைப்போல் புத்திசாதுரியம் மிக்கவர்களை உலகில் வேறெந்த நாட்டிலும் காணமுடியாது

## ஜே. வி. பி. எம். பி. நந்தன குணதிலக

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் போன்று சிறந்த ஆளுமை மதி நுட்பம், திறமை, தியாக மனப்பான்மை மிக்கதும் அரசியல் சாணக்கியத்துடனும் புத்தி சாதுரியத்துடனும் செயற்படக் கூடிய வல்லமைமிக்க தலைமைத்துவத்தைக் கொண்டுள்ளதுமான ஒரு அமைப்பு உலகில் வேறெந்த நாட்டிலுமேகிடையாது.

மக்கள் விடுதலை முன்னணியின் மாத்தளைக் கிளையின் ஏற்பாட்டில் அண்மையில் மாத்தளையில் நடைபெற்ற சமாதானமா? ஈழமா? என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் மாத்தளைமாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணசபைஉறுப்பினர் சரத்விஜேசிங்க தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் நந்தன குணதிலக மேலும் கூறுகையில்,

### ஈழ இராச்சியமே அரசின் இலக்கு

சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பெயரில் இன்றைய அரசாங்கம் மேற்கொண்டு வரும் ஒவ்வொரு நடவடிக்கையும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தனி ஈழ இராச்சியம் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதையே கருப்பொருளாகக் கொண்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஈழம் வழங்கப்படுமானால் வட-கிழக்கில் தமிழ், முஸ்லிம் கலவர மொன்று இடம்பெறுவது தவிர்க்க முடியாதது என முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே தெரிவித்துள்ளார்,

அவ்வாறொரு கலவரம் ஏற்படுமானால்அதற்கான முழுப் பொறுப்பையும் இன்றைய அரசாங்கமே ஏற்க வேண்டும் என்றார்.

மேலும் கருத்துக் கூறுகையில்;

### நாம் சமாதான எதிரிகளல்ல

ஒரு சிலர் எம்மை சமாதானத்தின் எதிரியாக எடை போடுகின்றனர். இது முற்றிலும் தவறான கருத்தாகும். நாமும் சமாதானம் அவசியம் என்பதை வலியுறுத்தி வருகிறோம்;

அதே சமயம் நாட்டைப் பிளவுபடுத்தாது எந்தவொரு சமூகத்திக்கும் பாதிப்பு ஏற்படுத்தாதவாறு சமாதானம் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதையே வலியுறுத்தி வருகின்றோம்,

இது சமூக ரீதியாக பிரிக்கக் கூடிய பெரிய நாடல்ல. இது ஒரு சிறிய நாடு சுமார் 2 ஆயிரத்து 500 ஆண்டுகளாக ஒரே பூமியாகவுள்ள நாடு. ஒரு சிலரின் தேவைக்காக நாட்டையும் நாட்டு மக்களையும் கூறுபோட எத்தனிக்கும் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கக் கூடாது,

அமெரிக்க வல்லரசு ஆசிய, நாடுகளில் தனது ஸ்திரத் தன்மையை நிலை நாட்ட இலங்கையை ஒரு தளமாக அமைத்துக் கொள்ள முயற்சிக்கிறது

### நாட்டைத் துண்டாட அமெரிக்கா முயற்சி

இதன் காரணமாக ஒரு நன்கொடை என்ற பெயரில் நம் நாட்டுக்கு ஒரு சில சலுகைகளை வழங்கிக் கொண்டு நாட்டைத் துண்டாடி ஆக்கிரமிக்க முயற்சிக்கின்றது. இதற்கு அரசு பலிக்கடாவாகி விட்டது,

அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகள் சர்வதேச மட்டத்தில் தமது அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் பலப்படுத்திக் கொள்ள உள் நாட்டுப் பயங்கரவாத அமைப்புக்களுக்கு மறைமுகமான ஒத்துழைப்புக்களைவழங்கி ஊக்குவித்து வருகின்றன;

அமெரிக்க வல்லரசின் நிர்ப்பந்தத்தின் பேரில் இன்றைய ஆட்சியாளர்கள் இலங்கையில் வட பிராந்தியத்தில் தமிழ் கத்தோலிக்க இராச்சியமொன்றை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அங்கு அமைய விருப்பது இந்துதமிழ் இராச்சியம் அல்ல இந்த, நாட்டின் இறைமையையும், ஒருமைப்பாட்டையும் காப்பாற்ற அன்றையபௌத்த பிக்குகள் பாடுபட்டனர்.

ஆனால், இன்றையபௌத்த பிக்குகளில் ஒரு சிலரே நாட்டைத் துண்டாட எடுக்கப்படும் முற்சிகளுக்குத் துணை போகின்றனர் என்று குறிப்பிட்டார்; (உ)

## சைக்கிள் பாதுகாப்பு கட்டணம் உயர்வு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் யாழ் மாநகர சபையின் கண்காணிப்பின் கீழ் உள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களின் பாதுகாப்புக்கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது;

இந்த வகையில், சைக்கிளுககு 2 ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு 4 ரூபாவும் அறவிடப்படவுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் எஸ். சந்தையன் தெரிவித்தார்;

தற்பொழுது சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில், சைக்கிளுக்கு ஒரு ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு 2 ரூபாவும் அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது, (உ-16)

## கிராமிய அபிவிருத்திக்கு 12 இலட்சத்து 90 ஆயிரம்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கானவேலைத்திட்டங்களைப் பூர்த்திசெய்வதற்கென வடககு-கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தினால் யாழ். செயலகத்தில இயங்கும கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்திற்கு 12 இலட்சத்து 90 ஆயிரம ரூபா வழங்கப்பட்டுளளது,

இதேவேளை, யாழ் மாவட்டத்தில் கிராமிய அபிவிருத்திக்கென 36 இலட்சத்து 60 ஆயிரம ரூபா ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிதிமூலம் சுழற்சி முறைக்கடன் வழங்கப்படுவதுடன் கிராமிய அபிவிருத்தி நிலையக்கட்டடம் அமைக்கப் படவுள்ளது, (உ-6)

## தலைவர் பிரபாவுக்கு விரைவில் பொதுமன்னிப்பு?

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுககு எதிராக இலங்கை நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு சமாதானப பேச்சுவார்த்தைகளை பாதிக்கவில்லை என்று இராஜதந்திரிகள் கருத்து தெரிவித்துளளனர்.

உலகநாடுகள் சிலவற்றில் இத்தகைய சமதான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட சமயங்களில் யுத்தகால குற்றச் சாட்டுகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டிய அவ் அதிகாரிகள் தலைவர் பிரபாகரன் விடயத்திலும் இது அமுல்படுத்தக் கூடிய சாததியம் இருபபதாக தெரிவித்துள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் பிந்திய நிலைகளில் புலிகளின யுத்தகால குற்றங்களுககு பொது மன்னிப்பு வழங்குவது குறித்து ஆராயப்படும எனறும் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (உ-3)

மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம்

## நாளைய கண்டன ஊர்வலத்துக்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

கொழுமபு மேல் நீதிமன்றம் தமிழ்த்தேசியத் தலைவர் வே. பிரபாகரனுக்கு வழங்கியுளள 200ஆண்டுகள சிறைத் தண்டனை எனும் தீர்ப்பை ஆட்சேபித்து நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் ஊர்வலத்துக்கு மனிதநேய அமைப்புகள ஒன்றியம தனது பூரண ஆதரவை வழங்குகிறது.

மேற்படி அமைப்பானது விடுத்துளள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில மேலும், சமாதானப் பேச்சு நடைபெற்று தமிழரின் அபிலாஷைகள் நிறைவேறும் என எதிர்பார்த்து நிற்கும் தமிழர் மத்தியில் இத்தீர்ப்பு கடும விசனத்தை ஏற்படுத்தியுளளது,

எனவே, மேல் நீதிமன்றத் தீர்ப்பை ஆட்சேபித்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புகள், பொது மக்கள் ஆகியோர் ஒன்றிணைந்து கண்டன ஊர்வலத்தில் கலந்து ஒட்டுமொத்த தமிழர்களின ஆட்சேபனையை சிங்கள தேசத்துக்கும் சர்வதேசத்துக்கும் தெரிவிப்போமாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது; (உ)

## சிஹல உறுமய தலைவர் உயர்நீதிமன்றத் தீர்ப்பை அமுலாக்கக் கோரிக்கை

(கொழும்பு)

மத்திய வங்கி குண்டுத் தாக்குதல் தொடர்பானமேல் நீதிமன்றத் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டியதுஇரகசியப் பொலிஸாரின் கடமை என சிஹல உறுமய தலைவர் திலக் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

மேல் நீதிமன்ற தீர்ப்பை அரசு அமுல்படுத்தா விட்டால், மக்கள் சட்டம் ஒழுங்கில் நம்பிக்கை இழந்து விடுவார்கள் என மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

## சமுர்த்தி பணியாளர்க்கு புதிய கடன் திட்டம்

(கொழும்பு)

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும், சமுர்த்தி முகாமையாளர்களுக்கும் புதிய கடன் திட்டம் ஒன்றை சமுர்த்தி விவகார அமைச்சு அறிமுகப்படுத்தவுள்ளது.

இதன் கீழ், இவர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாதொடக்கம் 5 இலட்சம் ரூபா வரை கடன் வழங்கப்படும் என்று சமுர்த்தி விவசாய, கால்நடை அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இத் திட்டம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, சமுர்த்தி அமைச்சு காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

காசநோய்ப்பிரிவை இடம்மாற்றக்கோரி

## கோப்பாய் ஆஸ்பத்திரி முன் இன்று மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினர் வைத்தியசாலை அதிகாரியின் வாசஸ்தலத்தில் இயங்கிவரும் காசநோய் சிகிச்சைப்பிரிவை பழைய இடத்திற்கு இடம் மாற்றுமாறு கோரி இன்று மறியல் போராட்டம் இடம் பெறவுள்ளது.

கோப்பாய் பொது நிறுவனங்கள்இணைந்து இம்மறியல் போராட்டத்தினை ஏற்பாடு செய்துள்ளன.

பொதுமக்களின் குடியிருப்புகளுக்குமத்தியில் இயங்கி வரும் இக் காசநோய்ப்பிரிவை பழைய இடத்திற்கு மாற்றுமாறு பலதடவைகள் உரிய அதிகாரிகளிடம் கோரப்பட்டும் பலன் ஏதும் கிட்டாத நிலையிலேயே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-9)

அதிரடிப்படைத் தளபதியை

## தளபதி கேணல் கருணா சனியன்று சந்திப்பார்

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா எதிர் வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை விசேட அதிரடிப்படைத் தளபதி நிமால் குணதிலகவை சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பின்போது மட்டு-அமபாறை பிரதேசங்களின் பாதுகாப்பு உட்பட தாய்லாந்து பேச்சுவார்த்தைகளின் போது கிழக்கு மாகாணம் சம்பந்தமாக ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் முடிவுஎடுக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவுளள இச்சந்திப்பில தமிழீழவிடுதலைப் புலிகள்தரப்பில மேலும் சில பிரதிநிதிகளும் அதிரடிப்படையின் உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தாய்லாந்துபேச்சுவார்த்தை குறித்து தலைவர் பிரபாகரனுககு விளக்கம் அளித்தபின்னர், கேணல்கருணா படைத் தளபதிகளைச் சந்திக்கவிருப்பது குறிப்பிடத்தககது. (உ-8)

## தமிழ்ச்செல்வன் கருணா வன்னி வந்து சேர்ந்தனர்

(வவுனியா)

தாய்லாந்து பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டுவிட்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனும், மட்டுஅம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணாவும் நேற்று வன்னிவந்து சேர்ந்துள்ளனர்.

தாய்லாந்திலிருந்துநேற்று முன்தினம் இரவு 11 45 மணியளவில் கொழும்புவந்தஇவர்கள், இருவரும் பிரபலஹோட்டல் ஒன்றில் தங்கி விட்டுநேற்றுக் காலை விசேட ஹெலிகொப்டர் மூலம் வன்னிவந்து சேர்ந்தனர்;

இவர்கள்இருவரும்இன்னும் ஓரிரு நாள்களுக்குள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை சந்தித்து தாய்லாந்து றோஸ்கார்டன் ஹோட்டலில் நடைபெற்று முடிந்த முதலாவது சுற்று 2 ஆம் கட்டப்பேச்சுவார்த்தைகள் தொடர்பாக விளக்குவர் என தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

காஷ்மீர் புதிய முதல்வரின் கொள்கைகள்

# இந்தியாவின் பாதுகாப்பிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துமாம்

## பாரதீய ஜனதா தலைவர் கருத்து

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் புதிய முதலமைச்சர் முக்திமுகமட் சயீத்தின் புதிய கொள்கைகளை உடனடியாக மறுபரிசீலனை செய்யுமாறுபாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் வெங்கையா நாயுடு கோரியுள்ளார்.

சிறையிலுள்ள தீவிரவாதிகளை விடுவிப்பது, அங்கு காவலில் உள்ள படையினரை விலக்கிக் கொள்வது மற்றும், ''பொடா'' சட்டத்தை பயன்படுத்தாமல் விடுவது ஆகிய முக்தி முகமட்சயீட்டின் புதிய கொள்கைகள் நாட்டின் பாதுகாப்பில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும் என்று தெரிவித்த வெங்கையா நாயுடு இப்புதிய கொள்கைகளை உடனடியாக அவர் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் முக்தி முகமட் சயீத்தின் புதிய கொள்கைகள் நாட்டிற்கு எதிரான தீவிரவாதத்தினை ஆதரிப்பதாக அமைகின்றதெனவும், காங்கிரஸ் கட்சியும், மக்கள் ஜனநாயகக் கட்சியும் இணைந்து இக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படாத வகையில நடத்து-கொள்ள வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-2)

# ஐவரிக்கோஸ்டில் மீண்டும் குழப்பம் ஏற்படும் அபாயம்

## பேச்சுக்களிலிருந்து வெளியேற கிளர்ச்சிவாதிகள் யோசனை

(அபிட்ஜான்)

ஐவரிக்கோஸ்ட் அரசுடன் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு இணங்கி வந்த கிளர்ச்சிவாதிகள் தற்போது தமது கோரிக்கைகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் சமாதானப் பேச்சுவார்த்தையில் இருந்து வெளியேறிவிடப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த காலங்களில் ஐவரிக் கோஸ்ட் இராணுவத்தினரிற்கும் கிளர்ச்சிவாதிகளிற்கும் இடையில் தொடர்ந்து கொண்டிருந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்டு வந்த போதிலும், இப்பொழுது கிளர்ச்சிவாதிகள் ஜனாதிபதி லோரன்ஸ் கபோக்கா பதவி விலகப்பட்டு, புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை உட்பட தமது அனைத்து கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் சமாதானப் பேச்சு வார்த்தையில் இருந்து வெளியேறி விடப் போவதாக எச்சரித்துள்ளனர் என்று அந்நாட்டு செய்தி ஸ்தாபனங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், இதன் காரணமாக ஐவரிக் கோஸ்டில் இடம் பெறவுள்ள சமாதானப் பேச்சுக்கள் குழம்பி விடும் நிலை தோன்றும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (2)

# இஸ்ரேல் கோரிக்கையை பிரிட்டன் நிராகரித்தது

(லண்டன்)

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலின் போது ஈரானும் இலக்காகக் கொள்ளப்பட வேண்டும் என்ற இஸ்ரேலின் கோரிக்கையைப் பிரிட்டன் நிராகரித்துள்ளது.

மத்திய கிழக்கிற்கும், ஐரோப்பாவிற்கும் ஈரான் அச்சுறுத்தலாகவுள்ளது என்றும், ஈராக் மீதான விவகாரம் முடிவிற்கு வந்தவுடன் ஈரான் ஒரு இலக்காக கொள்ளப்பட வேண்டும் என்றும் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் லண்டனில் இருந்து வெளியாகும் ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றிலேயே தெரிவித்துள்ளார்.

எனினும், அவ்வாறான அச்சுறுத்தல் மிகத்தவறானது என பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஜக்ஸ்ரோ கூறியுள்ளார்.

இதேவேளை ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க முயற்சிக்கும் அமெரிக்காவிற்கு பிரிட்டன் ஆதரவு வழங்கிய போதும் இஸ்ரேலின் கோரிக்கையை நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது. (4)

## உலக தரிசனம்

திடீர் தீ விபத்து

### ஒருவர் பலி 250 குடிசைகள் நாசம்

(புதுடில்லி)

புதுடில்லி கிராமப் பகுதி ஒன்றில் மர்மமான முறையில் ஏற்பட்ட திடீர் தீவிபத்தினால் ஒருவர் உயிரிழந்ததுடன் 250 குடிசைகள் எரிந்து நாசமாகியுள்ளன.

தீ விபத்து ஏற்பட்ட வேளை தீயணைக்கும் வசதிகள் எதுவும் உடனே கிடைக்காத காரணத்தினால் 250 குடிசைகளும் எரிந்து நாசமாகின என்றும் பகல் பொழுதில் இவ் விபத்து நேர்ந்ததால் உயிரிழப்புக்கள் பெருமளவில் குறைக்கப்பட்டதெனவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (2)

# வறுமையின் கோரம் 19பேர் பரிதாப மரணம்

(புதுடில்லி)

இந்திய ராஜஸ்தான் மாநிலத்தில் வறுமையினால் 12 குழந்தைகள் உட்பட 19 பேர் இறந்துள்ளனர் என்று அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் மத்தியப் பிரதேசத்தின் எல்லைப்பகுதியை அண்டியுள்ள ராஜஸ்தான் கிராமங்களின் மக்கள் வறுமையினால் பழுதடைந்த கோதுமைமாவில் தயாரித்த உரொட்டிகளை சாப்பிட்டதன் காரணமாகவே 19பேர் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து ராஜஸ்தான் அரசு உடனடியாக நிவாரணப பணிகளை தொடங்க வேண்டும் அவ்வாறு செய்யத் தவறினால் மேலும் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் கர்நாடக தொண்டர் நிறுவனங்கள் ராஜஸ்தான் அரசாங்கத்தை கடுமையாக எச்சரித்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (2)

முஸ்லிம்களுக்கு எதிராகவல்ல

# பயங்கரவாதத்திற்கு எதிராகவே யுத்தம்

## அமெ. அதிபரின் ரமழான் செய்தி

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் நேற்று முன்தினம் அமெரிக்கா மற்றும் உலகளாவிய ரீதியிலுள்ள முஸ்லிம்களுக்கு ரமழான் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் செப்டம்பர் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் இஸ்லாம் மதத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டதேயன்றி, முஸ்லிம் மக்கள் மீது அல்ல என்று புஷ் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் உலகளாவிய ரீதியில் ஒரு பில்லியன் மக்களால் பின்பற்றபபடும் அமைதியை விரும்பும் சமயம் இஸ்லாம் என்றும் அமெரிக்காவிலும் பல முஸ்லிம்கள் உள்ளனர் என்றும் கூறினார்.

உலகளாவிய ரீதியிலான பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தில் அமெரிக்காவிற்கு பல முஸ்லிம் நாடுகள் ஆதரவு வழங்கியுள்ளதுடன் நட்புறவைப் பேணியுள்ளனர் என்றும் இவர்களுக்கு அமெரிக்கா நன்றி கூறுகின்றது என்றும் புஷ் தனது ரமழான் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (4)

### ரயிலில் தீ: 12பேர் பலி

(பாரிஸ்)

பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் இருந்து பயணிகளுடன் புறப்பட்ட ஜேர்மன் ரயிலில் திடீரென பற்றிக் கொண்ட தீயினால் 12பேர் உயிரிழந்துள்ளதுடன் பலபேர் படுகாமடைந்துள்ளார்களென தெரிவிக்கப்படுகின்றது. (2)

### காங்கிரஸ், செனட் தேர்தல் ஆரம்பம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் காங்கிரஸ் மற்றும சென்ட் சபைகளுக்கான தேர்தல்கள் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளன.

காங்கிரஸ் சபையில் 435 ஆசனங்களுக்கும் 100 செனட் சபையில் ஆசனங்கனில் 34 ஆசனங்களுக்கும் 36 மாநில ஆளுநர் பதவிகளுக்கும் தேர்தல் நடைபெறுகின்றது.

இதேவேளை தேர்தல் நடைபெறும் விபரங்கள் இது வரையும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# பாலித்தீவு குண்டுவெடிப்பு: மினிவான் உரிமையாளர் கைது

(ஜகார்த்தா)

இந்தோனேஷியப் பாலித்தீவில் கடந்த மாதம் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பில் சம்மந்தப்பட்ட மினிவானின் உரிமையாளரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்த மினிவானின் உரிமையாளருக்கு சம்பவத்துடன் தொடபிருப்பதாகச் சந்தேகிக்கப்படுவதாலேயே யாவாப் பொலிசார் அவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட நபர் இந்தோனேஷியா பிரஜையா? அவர் எங்கு வைத்துக் கைது செய்யப்பட்டார் என்பதை பொலிசார் கூறமறுத்துவிட்டனர்.

பாலிக் குண்டு வெடிப்புடன் சம்பந்தப்பட்ட மூவரின் புகைப்படங்களை ஏற்கனவே இந்தோனேஷியப் பொலிசார் விநியோகித்திருந்தனர். எனினும், சம்பந்தப்பட்ட மினிவானின் உரிமையாளர் இப்புகைப்படங்களில் உள்ளாரா என்பது இது வரையும் தெரியவரவில்லை. (4)

# ஆயுதப்பரிசோதகர்களை விரைந்து அனுப்ப முடிவு

(உரும்சி)

ஈராக்கில் ஆயுத சோதனையை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதப் பரிசோதகர்களை வெகுவிரைவிலேயே அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. என்று ஐக்கிய நாடுகள் சபையின் நவம்பர் மாதத்திற்கான தலைமைத்துவத்தை வகிக்கும் சீனா தெரிவித்துள்ளது.

இதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாகவும், பரிசோதகர்கள் தங்களது பணியினை விரைவில் ஆரம்பிக்க ஆயத்தமாகிறார்கள் எனவும் சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சீனா, ஈராக் மீதான ஆயுதங்கள் தொடர்பான சோதனை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு ஆதரவு வழங்கியுள்ளது.

இதேவேளை, அமெரிக்கா தம்மீதான தாக்குதலை நடத்துவதற்கு எத்தனித்து வருவதாக ஈராக் சுட்டிக் காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (4)

### எகிப்தில் பஸ் – லொறி விபத்து 29பேர் பலியாகினர்

(கெய்ரோ)

எகிப்தின் பாலைவனப் பகுதியிலுள்ள நெடுஞ்சாலையொன்றில்ஒரு லொறியும், பஸ்வண்டி ஒன்றும் மோதிக கொண்டதில் 29பயணிகள் கொல்லப்பட்டதுடன் 25பேர் படுகாயமடைந்துள்ளனரென தெரிவிக்கப்பட்டது.

# மரண தண்டனைகள் சீனாவில் அதிகரிப்பு

## குற்றச்செயல்களைக் குறைப்பதற்காக!

(பெய்ஜிங்)

சீனாவில் குற்றச் செயல்களிற்கு எதிரானபோராட்டம் தீவிரப்படுத்தப் படவேண்டும்என்ற கோரிக்கைக்கு ஆதரவாகக்கடந்த வாரத்தின் இறுதி னங்களில் மட்டும் 46குற்றவாளிகளிற்குமரணதண்டனை விதிக்கப் பட்டுள்ளது என்று சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, பல்வேறு குற்றச் செயல்கள் புரிந்தவர்கள் என்ற அடிப்டையில் கடந்த வருடம் மட்டும் 2468 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த வருடம் 46 பேரிற்கு மரண தண்டனையினை சீனா விதித்துள்ளதாகத் தெரிவித்த சர்வதேச மன்னிப்புச் சபை, சீனாவை இத்தோடு மரணதண்டனை விதிக்கும் நடைமுறையினை முடிவுக்கு கொண்டு வருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, உலகளாவிய ரீதியில் விதிக்கப்படும் மரணதண்டனைகளை விடவும், சீனாவினால் விதிக்கப்பட்டுள்ள மரணதண்டனையின் எண்ணிக்கை மிகவும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

சுவாஸிலாந்து மன்னர்

# தன் மகளை கட்டாய மனைவியாக்கினாராம்

## நீதிமன்றில் ஒருதாய் வழக்கு

(பாபேன்)

சுவாஸிலாந்து நாட்டு மன்னரிற்கு எதிராக அந்நாட்டு பெண்மணி ஒருவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

வழக்குத் தாக்கல் செய்துள்ள பெண்மணி தனது 18 வயது மகளை கட்டாயத்தின் பெயரில் சுவாஸிலாந்து மன்னர் மனைவியாக்கிக் கொண்டுள்ளார்.

இவர் எனது அனுமதி இன்றியே இவ்வாறு செய்துள்ளார் என்றும் இவர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.(2)



சீனாவின் பெங்ஜி நகரில் இருந்த பெரிய கட்டிடம் ஒன்று குண்டுவைதது தகர்க்கப்பட்டது. அவ்விடததில் மூன்று பெரிய தண்ணீர் தொட்டிகள் கட்டுவதற்காக அங்குள்ள மற்ற கட்டிடங்களையும் இடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# இன்று ஒரு தகவல்

## உயிர் வாழ்க்கை எதுவோ?

ஒரு சமயம் வயதான ஒருவர் புத்தரிடம் வந்து சேர்ந்தாராம். கொஞ்சக் காலம் அங்கேயே இருந்தார். உண்மையான துறவியாகவே ஆகிவிட்டாராம் அந்தச் சீடரும். புத்தர் அவரைக் கூப்பிட்டிருக்கிறார். ''துறவியாரே! உங்களுக்கு இப்போது வயது என்ன ஆகிறது?'' என்று கேட்டிருக்கிறார். அதற்கு அந்தச் சீடர் ஐந்து வயது ஆகிறது'' என்று பதில் சொன்னாராம். இதைக் கேட்டதும் புத்தருக்கு ஆச்சரியம்!

''உங்களுக்கு எழுபது வயதுக்கு மேலே இருக்கும் போல இருக்கிறது! ஆனால் ஐந்து வயது தான் ஆகிறது என்று சொல்கிறீர்களே! என்ன காரணம்'' என்று கேட்டிருக்கிறார்... அதற்கு அந்த சீடர், ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால்... ''உண்மையான ஞானம் எனக்கு கிடைத்து ஐந்து வருஷம் தான் ஆகிறது; அன்பு என் உள்ளத்தில் தோன்றியிருப்பதும் இந்த ஐந்து வருஷத்திலே தான். இதற்குமுன்னர் நான் வாழ்ந்திருக்கிற வாழ்க்கை ஒரு கனவு மாதிரி எனக்கு தெரிகிறது. அந்த வாழ்க்கையினால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்று தான் தோன்றுகிறது. அதனாலே தான் எனக்கு வயது ஐந்து என்று சொன்னேன்'' என்றாராம்;

அவர் ஐந்து வருஷங்கள் தான் இந்த உலகத்திலே வாழ்ந்ததாகவே நினைக்கிறார். அது உண்மைதான்; இந்த உலகத்தில் உயிரோடு வாழ்கிறவர்களை உயிரோடு வாழ்கிறவர்கள் என்று ஒத்துக் கொள்ள முடியாது. வள்ளுவரே இதனை ஒத்துக் கொள்வதில்லையே!'' வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார். இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர்'' என்கிறார் அவர். பழி உண்டாகாமல் வாழ வேண்டும். அது தான் வாழ்க்கை.

மற்றவர்களுக்கு உதவி செய்து அதனால் வருகிற புகழ் இருக்கிறதே அந்தப் புகழோடு வாழ வேண்டும். மற்றவர்களுக்குக் கெடுதல் பண்ணினால் பழிவரும், அந்தப் பழியோடு வாழ்கிறவர்களை வாழ்கிறவர்களாகவே சேர்த்துக் கொள்ள முடியாது; கெட்ட எண்ணங்கள் எல்லாம் அறவே இல்லாமல் போக வேண்டும்.

அதன் பின்னர் தான் ஒரு தெளிவு வரும் ஞானம்வரும்.

ஒரு குருஇருந்தார். அவரைப் பார்த்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு வரலாம் என்று நினைத்துச் சீடன்ஒருவன் போனான். போய்க் கொண்டிருக்கிற பொழுது, வழியில் யோகி ஒருவர் வந்தார். 'எங்கேயப்பா போகிறாய்?' என்று கேட்டார். குருவைப் பார்க்கப் போகிறேன்' என்று சொன்னான் சீடன். அந்தக்குருவின் மீது இந்த யோகிக்கு ஏற்கனவே பொறாமை.

அதனால் அந்தச் சீடனைப் பார்த்து 'என்னுடைய குருவுக்கு எதுவும் தெரியாது; அவர் ஒருமுட்டாள். நீ அவரைவிடப் பெரிய முட்டாள். அதனாலே தான் அவருக்கு போய் சீடனாக இருக்கிறாய் உன்னுடையகுருவினால் ஏதாவது அற்புதம் செய்து காட்ட முடியுமா? என்னைப் போல் அவரால் தண்ணீரின் மேல் நடக்க முடியுமா? ஆகாயத்தில் பறக்க முடியுமா? இல்லை... பூமியிலே தான் புதைந்து கிடக்க முடியுமா? அவரால் எதுவும் முடியாது. அப்படியிருக்கும் பொழுது அப்பேர்ப்பட்ட குருவிடம் போய் ஏன் நேரத்தைவீணாக்குகிறாய்?' என்று தற்பெருமையோடு கேட்டாராம்.

அதற்கு அந்த சீடன் நான் ஏன் அவரைக் குருவாக ஏற்றுக் கொண்டு வணங்குகின்றேன் என்றால், அவர் எப்பொழுதும் கோபப்படமாட்டார்; பிறரைக்குறை சொல்ல மாட்டார். இவற்றைத் தான் அற்புதங்களிலெல்லாம்பெரிய அற்புதங்கள் என்று நான் நினைக்கிறேன்' என்று சொன்னானாம்; இதைக் கேட்டதும் அந்தயோகிதலையைத்தொங்கப் போட்டுக்கொண்டு போய் விட்டாராம்.

குளத்தின் மேலேநடப்பதை விடக் கோபப்படாமல் நடக்கிற அதிசயம் தான் பெரியது; அப்படி நடக்கப் பழக்கப்படுத்திக் கொள்வது தான் மனிதனுக்கு நல்லது. கவலை எப்படி வருகிறதென்பதற்கு ஒருவர் காரணம் சொன்னார். முதலில் கோபம் வருமாம்; அதைக் காட்டுவதற்குஎதிரில் யாரும் இல்லையென்றால் அந்தக் கோபம்தன்மேலேயே திரும்புமாம். அந்தச் சூழ் நிலையில் தான் அதனைக் கவலை என்கிறோமாம். கவலை வருவதற்கு இப்படியும் ஒரு வழி. மனத்திலே சாந்தி இல்லாமல் வாழ்ந்தால் அது என்ன வாழ்க்கை. சிலருக்குக் கடைசிக் காலம் வரை கூட அது வருவதில்லை.

சர்வாதிகாரி ஒருவன் மரணப் படுக்கையில் கிடந்தான். வைத்தியர்கள் எல்லோரும் கைவிட்டுவிட்டார்கள். அவருக்கு வைத்தியம் பார்த்த பெரியவர் ஒருவர் வந்தார். ''செத்துக் கொண்டிருக்கிறவன் மனச் சாந்தியுடனாவது மறு உலகம் போய்ச் சேரட்டும்'' என்று நினைத்தார். ''மேன்மை தங்கிய அதிபரே! தங்கள் எதிரிகளை எல்லாம் மன்னித்து விடுகிறீர்களா?'' என்று கேட்டார். சர்வாதிகாரி சாவகாசமாக ''ஐயா! நான் மன்னிப்பதற்குத் தயாராக இருக்கின்றேன்... ஆனால் இப்போது எனக்கு விரோதிகள்யாருமே இல்லை. ஏனென்றால், அவர்களையெல்லாம் ஏற்கனவே நான் சுட்டுத் தள்ளிவிட்டேன்'' என்று பதில் சொன்னானாம்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# 4 நாள் ஆளுமை விருத்திச் செயலமர்வு தம்புல்லவில்

(தென்மராட்சி)

முரண்பாட்டுக் கற்கைகளுக்கான பேர் கொவ் நிறுவனத்தின் ஏற்பாட்டில்நாளைமுதல் எதிர்வரும் 11 ஆம் திகதிவரை தம்புல்லவிலுள்ள சந்தலமா எனும் இடத்திலுள்ள கல்சரார் கிளப் ஹெ◌ாட்டலில் யாழ்ப்பாணத் தலைவர்களுக்கான ஆளுமைவிருத்திஎனும்தலைப்பிலான நான்கு நாள்பயிற்சிப் பட்டறைநடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் பங்கு கொள்ளும் பொருட்டு இங்கிருந்து 25 பேர் செல்கின்றனர்.

இவர்களுள் மூன்று பத்திரிகையாளர்களும் அடங்கியுள்ளனர்என்பதுகுறிப்பிடத் தக்கதாகும்; (உ-77)

# இளைஞர் விருது வழங்கல் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(ஈச்சமோட்டை)

'இளைஞர் விருது வழங்கல் 2002/2003' போட்டிகளுக்கான விண்ணப்பங்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் கோரியுள்ளது.

குறுநாடகம், பரதநாட்டியம் கிராமிய நடனம், இளம் பாடகர், கிராமியப் பா[illegible] நிர்மாணிப்பு நடனம், இஸ்லாமிய கீதம் [illegible] கவிதை, சாஸ்திரிய பாடல், சாஸ்திரிய வாத்தியம், மேற்கத்திய வாத்தியம், அறிவிப்பாளர், பேச்சு, கவிதை, சிறுகதை, பாடல் இயற்றுதல், கட்டுரை, சிறுவர் இலக்கியப் படைப்பு, தொலைக்காட்சி நாடகப்பிரதியாக்கம், சித்திரம், கிரபிக், சிற்பம், புகைப் படக்கலை போன்றவற்றில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

17-35 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் இதில் பங்குபற்ற முடியுமெனவும் ஒருவர் 5 போட்டிகளுக்கு மேல் பங்குபற்ற முடியாதெனவும், ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனி விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் உதவிப்பணிப் பாளர், நுண்கலைத் திறன் அபிவிருத்திப் பிரிவு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஹய்லெவல் வீதி, மஹரகம எனும் முகவரிக்கு டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பப் படல் வேண்டும்.

யாழ். குடா நாட்டுக்கு போட்டியாளர்கள் தமது படைப்புகளின் பிரதியொன்றை உதவி இயக்குநர் மாவட்ட காரியாலயம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கும் அனுப்பி வைக்குமாறும் இதனால் போட்டியாளர்களுடனான தொடர்புகளை தாம் பேணமுடியுமெனவும் மேலதிக விபரங்களை யாழ். மாவட்ட தே.இ.சே.மன்ற காரியாலயத்தில் பெறலாம் எனவும் யாழ் மாவட்ட தே. இ. சேமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-59)

## பாம்புக் கடி அதிகரிப்பு

(தென்மராட்சி)

மழைகாலம்ஆரம்பித்ததைத் தொடர்ந்து பாம்புக் கடியினால் பாதிக்கப்படுவோர் தொகை அதிகரித்து வருகின்றது:

குறிப்பாக தென்மராட்சிப் பகுதியிலுள்ள கிராமங்களில் பாம்புகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது. (உ-77)

## இராசி பலன்

7 - 11 - 2002

(ஐப்பசி 21, வியாழன்)

திருதியை மு: இ. 9.23 வரை

கேட்டை பி: இ. 2. 43 வரை

இராகுகாலம்- 1. 35-3. 05

நல்லநேரம்-7. 35-9. 05

**மேடம்**

அமைதிக் குறைவு, வாகன பயம், போசன சுகம், சத்துரு ஜெயம்.

**இடபம்**

களஸ்திர சுகம், திடீர் பயணம், நல்ல காரியம், பொருள் சேர்க்கை.

**மிதுனம்**

பகைவர் நேசம், உடல் நலம், காரிய சித்தி, நல்ல நிகழ்வு.

**கடகம்**

சகோதரர் உதவி, கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், மனச் சஞ்சலம்.

**சிங்கம்**

மாணவர் கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, ரோக பயம், காரிய தாமதம்;

**கன்னி**

கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை, அன்னியர் சந்திப்பு, காரிய அனுகூலம்.

**துலாம்**

வீண் வார்த்தை, காரிய தாமதம், நித்திரைக் குழப்பம், தொழில் கஷ்டம்.

**விருச்சிகம்**

காரியம் கைகூடும், அதிகாரம், தொழில் சிந்தை, ஜன வசியம்.

**தனுசு**

தொழில் நன்மை, சுப செலவு, காரிய தாமதம், கோபப்படுதல்;

**மகரம்**

கீர்த்தி, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், பொருள் வரவு.

**கும்பம்**

சுப நிகழ்ச்சி, தூரதேசச் செய்தி, பணிவிடை, கடின உழைப்பு.

**மீனம்**

தொழில் புதிய மாற்றம், ஆன்றோர் மதிப்பு, அச்சமான நிலை, ரோக நிலை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது);

வளவன்

## அகில உலக அகண்ட பஜனை

(தென்மராட்சி)

திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்திய சாயிசேவா நிலையத்தின் ஏற்பாட்டில் 24 மணி நேர அகில உலக அகண்ட பஜனைஎதிர்வரும்9 ஆம் திகதி பி. ப. 6. 00மணி தொடக்கம் 10 ஆம்திகதிமாலை6 00 மணிவரை நடைபெறவுள்ளது.

இப்பஜனையில் யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, நல்லூர், முத்திரைச்சந்தி, கல்வியங்காடு ஆகிய பஜனை நிலையங்களும் பாலவிகாஸ் மாணவர்களும் பங்குபற்றவுள்ளனர்.

முதல்நாள் நிகழ்ச்சி ஓம்காரம், காயத்திரி ஜெயம்மற்றும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (உ-77)

## கந்தசஷ்டி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அராலி மத்தி தறணன் பதி முருகமூர்த்தி ஆலயத்தில் கந்த சஷ்டி உற்சவம் கடந்த செவ்வாயன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தினமும் அபிஷேகம், வசந்த மண்டபப்பூசை ஆகியனஇடம் பெற்று எதிர்வரும் 10 ஆம் திகதி சூரன்போர் உற்சவம் இடம் பெறவுள்ளது. (உ)

# படை முகாம் பகுதிக்குள் குடியமர அனுமதி மறுப்பு

(மந்திகை)

பருத்தித்துறை இராணுவ முகாம் பகுதிக்குள் அமைந்துள்ள தமதுவீடுகளுக்கு மீளக் குடியமரச் சென்ற 10 குடும்பங்களை படையினர் திருப்பி அனுப்பியுள்ளனர்.

கடந்த 6வருடங்களாகவன்னியில் தங்கியிருந்துவிட்டுதற்போதையசமாதானச்சூழலில் தமது சொந்த வீடுகளில குடியிருக்கும் ஆவலுடன் வந்த குடும்பங்களுக்கே இவ் ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, இம் முகாம் பகுதிக்குள் சுமார் 30 வரையான குடும்பங்களை குடியமர படையினர் அனுமதி வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது;

குடியமர அனுமதி மறுக்கப் பட்ட மக்கள் தற்போது உறவினர் வீடுகளிலும் முகாம்களிலும் தங்கியுள்ளனர். (உ-23)

# ஜனநாயக அமைச்சர்கள் மாநாட்டில் டிரோன்

(கொழும்பு)

ஜனநாயக நாடுகள் சமூகத்தின் இரண்டாவது அமைச்சர் மாநாடு அடுத்த வாரம் தென்கொரியாவின் தலைநகர் சியோலில் 3 நாட்கள் நடைபெறவுள்ளது:

இம் மாநாட்டில் உரையாற்றுவதற்கு வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ அழைக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்கா, அவுஸ்ரேலியா இந்தியா, பங்களாதேஷ், இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளியுறவு அமைச்சர்கள் உட்பட 110ற்கும் அதிகமான நாடுகளின் பிரதிநிதிகள் இம் மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர். (உ-3)

மாளிகாவத்தை நிலைவரத்தை

# அமைச்சர் ஹக்கீம் நேரில் சென்று பார்வை

(கொழும்பு)

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்கு பொறுப்பானவர்கள் உரிய நேரத்தில் தலையிட்டிருந்தால், மாளிகாவத்தையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை குறைத்திருக்க முடியும்.

அப்பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்; இவ்வாறான அசம்பாவிதங்கள் மேலும் நடைபெறாது இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன என்றும்;

இக்கலவரம் குறித்து அரசு மிகவும் அவதானத்துடன் செயற்பட்டு வருவதுடன், இச்சம்பவத்தினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உரிய நஷ்ட ஈட்டை பெற்றுக் கொடுக்க ஆவனசெய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

# அரசு-புலிகள் சமாதானப் பேச்சு

# ஐ. நா செயலாளர் அனான் வரவேற்பு

(கொழும்பு)

தாய்லாந்தில் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் வரவேற்றுள்ளார்.

இலங்கையில் நிலவும் நீண்டகாலப் பிரச்சினை தீர்வுக்கு வரவேண்டுமானால் அரசு-புலிகள் தரப்பு பிரதிநிதிகளுக்கு இடையே மேலும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும்.

இதன் மூலம் நாட்டில் மோதலைத் தவிர்த்து நிலையான அரசியல் தீர்வை காண வழிவகுக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தாய்லாந்து சட்டாஹிப் கடற்படைத் தளத்திலும், றோஸ்கார்டின் ஹோட்டலிலும் நடைபெற்ற இரு கட்டப் பேச்சுவார்த்தைகளிலும் பல அரசியல் பிரச்சினைகளுக்கு இணக்கமான முடிவுகள் காணப்பட்டன.

இதேவேளை, தாய்லாந்தில் நடைபெற்று முடிந்த முதலாவது, இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தைகளை பிரிட்டனும், அமெரிக்காவும் வரவேற்றுள்ளன.

இவ்விரு நாடுகளும் தனித்தனியாக விடுத்துள்ள அறிக்கையில், இவ்வருட ஆரம்பத்தில் இரு தரப்பினாலும், கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதற்கு மேற்கொள்ளப்படும் ஈடுபாடு குறித்தும், சமாதான முயற்சியை முன்னெடுப்பதற்கான விருப்பங்கள் குறித்தும் பாராட்டுத் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# சிங்கள இனவாதிகளின் பேச்சைக்கேட்க

# தென்னிலங்கை மக்கள் தயாரில்லை

## தெளிவுபடுத்துகிறார் தேசியசமாதானப்பேரவைத்தலைவர்

(கொழும்பு)

தற்போதைய நிலையில் புலிகளை முழுமையாகநம்பக் கூடியதாக உள்ளது. விட்டுக் கொடுப்புகளையும் அர்ப்பணிப்புகளையும் அவர்கள் செய்துள்ளனர்.

வடபகுதியில் மூடப்பட்டிருந்த வீதிகளை மீண்டும் திறக்கப் புலிகள் உதவியுள்ளனர். தவிர, புலிகள் தவறிழைத்தால்கூட மக்கள் தட்டிக்கேட்கும் நிலை உருவாகியுள்ளது.

தேசிய சமாதானப்பேரவையின் இயக்குநர் ஜெகான் பெரேரா கொழும்புத் தமிழ்த் தினசரி ஒன்றுக்குஅளித்த பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர்மேலும் கருத்துக் கூறுகையில்;

1998 இல் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பீட்டின் படி 40 சதவீத மக்கள்மட்டுமே புலிகள் இயக்கத்துடன் பேச வேண்டும்என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர்.

இந்தத்தொகை தற்போது 80 ஆக உயர்ந்துள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தை தோற்றால் யுத்தத்துக்குச் செல்லாமல் மீண்டும் பேச்சுவார்த்தைநடத்த வேண்டும் என்று கூறும்அளவுக்கு சிங்களமக்கள் மாறியுள்ளனர்.

தமது உரிமைகளை வென்றெடுக்கவே புலிகள்இயக்கம் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகப் போராடிவருகிறது. அவர்களுக்கு இடைக்கால நிர்வாகசபை வழங்குவதில் தவறில்லை அது தற்காலிக தீர்வுமட்டுமே பின்னர் மாற்றுத்தீர்வுகள் வழங்கப் படலாம் எனக்குறிப்பிட்டார்.

மேலும் இனவாதிகளின் கருத்துக்களுக்கு தற்போது மக்கள் செவிசாய்ப்பதில்லை. இருந்தாலும் சிங்கள மக்களிடையே விடுதலைப்புலிகள் குறித்த சில சந்தேகங் கள் இருக்கவே செய்கின்றன.

சமாதானப் பேச்சுக்கள் முறிவடையும்வரை இனவாதிகளின் பேச்சை மக்கள் கேட்கத் தயாரில்லை. இடைக்கால நிர்வாகசபை வழங்குவதற்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்கமாட்டார்கள்.

இனவாதிகளை மாற்றவோ அறிவூட்டவோ முடியாது. அவர்களுடன் மோதினால் எம்மையே அழித்து விடுவார்கள்.

சமாதானம்குறித்து மக்களை அறிவூட்டி வருவதால் அவர்கள் இனவாதிகளுக்கு நல்ல பதிலடி கொடுக்கின்றனர் இனவாதிகளுக்கான ஆதரவு குறைந்துள்ளது என்றார். (உ)

# ஆலயக் கிரியைகள் ஆற்றிச்சிறப்புற்ற

# கரம்பன் சிவராமலிங்கக் குருக்கள்

### மறைந்தார் மாண்பு

ஆங்கில ஆட்சிக்காலத்தில் சிறிது மதசுதந்திரம் கிடைத்தபோது,முதலில்மடங்கள்தோன்றின. கரம்பன் கிராமத்தில் மேற்குமடம், கிழக்கு மடம் என இரண்டும் கந்த புராணம் படிக்கும் இடமாயின. வேல் வைத்துப் பூசை நடக்கும் இடங்களாகவும் விளங்கின. மேற்குமடம் முருகமூர்த்தி ஆலயமாகப் பரிணமித்தது. அயலில் அந்தணக் குடும்பம் சொந்த வீட்டில் வசதியாய் இருந்து, கோவிற் பூசையையும், கிராம மக்களின் வீட்டுக்கிரியைகளையும் முறையாக நடத்திவந்தது. அக்குடும்பத்தின் மணிவிளக்காகத் திகழ்ந்தவர் சிவராமலிங்கக் குருக்கள் கிராம மக்கள் செல்லமாகச் சிவகுரு ஐயர் என்று அழைத்தார்கள். அவரை 1941 முதல் அறிந்தேன் என்பதில் எனக்கு மகிழ்ச்சி.

#### அம்பலவாண நாவலர் ஏற்பாட்டில் கற்றல்

அவருடைய கல்வி அறிவின் மேம்பாட்டுக்கு காரணமென்ன? எப்படி வசதி கிடைத்தது எனப்பின்னாளில் விசாரித்தேன், சித்தங்கேணி அம்பலவாண நாவலர் பலகாலம் சிதம்பரத்தில் வசித்து சொந்த அச்சுக்கூடம் வைத்து ஆகமங்கள் மொழி பெயர்ப்புகள் பலவற்றை அச்சியற்றுவித்தவர். வடமொழியும் தமிழும்கசடக்கற்றவர்அவர்இடையில் யாழ்ப்பாணம்வந்தபோது இங்கு சைவசமயக்கல்வி அருகியதைக் கண்டு மனம் நொந்தார். சிலரைச்சிதம்பரத்திற்கு அழைத்துச் சென்றார். அவர்களுள் சிவராமலிங்க ஐயரும் ஒருவர். நாலரை ஆண்டுகள் அங்கிருந்து அரும்பெருங் கல்வி கற்றார். தமிழிலக்கணம், புராணம், ஆகமம் முதலியவற்றை அம்பலவாணர்தாமே கற்பித்தார். வேதாத்தியயனத்தை விசேடமாக அதற்குரிய வைதிகப் பிராமணர் மூலம் கற்க ஏற்பாடு செய்தார். ஐயர் அவர்கள் முதிய வயதிலும் 'சுவாமிகள்' என்றே அம்பலவாணநாவலரை மரியாதையுடன் குறிப்பிடுவார்.

எனது ஆப்தநண்பர் கரம்பன் கிழக்கு இராமசாமி, கிருஷ்ண பிள்ளையுடன் பாடசாலைத் தோழன் அவர்மூலம் இவரது இளமைப்பாடசாலை வாழ்க்கையைப் பற்றி அறிந்தேன். அவருடையதர்ம பத்தினியார் சௌந்தரம் அம்மா அவர் வாழ்க்கை சிறப்புறப்பெரிதும் உழைத்த உத்தமி. தினமும் அபிராமி அந்தாதி பாராயணம் செய்பவர். தக்கார் தகவிலர் என்பது அவரவர்தம் எச்சத்தாற்காணப்படும்.

என்றபடி மூன்றுமணிகளும் பேரப்பிள்ளைகளும் சீரும் சிறப்பும்பெற்று வாழ்வதைக் கண்டுகளித்தவர். சுவாமியை அழகுறஅலங்கரிக்கும் கைங்கரியத்தைச்செய்தசித்தம் அழகி

**★ ஆ. சபாரத்தினம் ★**

ஊர்திரும்பிய அவர் தந்தையாரின் கோவிற் பூஜைக்கருமங்களைச் சிறப்பாகநடாத்தி வந்தார். 1943 ல் மகாகும்பாபிஷேகம் அதி சிறப்பாக நடந்தபோது, பம்பரம்போல அனைத்துக் கருமங்களையும் நிர்வகித்தார்.

#### இல்லறவாழ்வு

அந்தஉத்தமர் குடும் பத்தில் பிறந்தவரில் மூத்தவர் பாலசுப்பிரமணியஐயர் (இலங்கை வானொலி) இரண்டாமவர் சாம்பசிவக்குருக்கள்மூன்றாம் புத்திரரே சதாசிவசர்மா. பதினாறு வயதுஇளைஞனாக இருந்தபோது அழகிய குடுமியுடன், கண்கவர் சுந்தரபுருஷனாக, காட்சியளிப்பார். யார். வாழ்வும்அழகுகொழித்தது, அப்படிஅமைவதற்குப் பூர்வஜன்ம புண்ணியம்பெருமளவு இருந்ததுதான் காரணமன்றோ!

அவர்கரம்பன் கிழக்கு, மேற்கு இரு பகுதிகளிலும். இரு முருகன்கோவில், காளி கோவில், வைரவகோவில் ஆகியவற்றில் கிரியைத் தொண்டுசெய்து, நிறைந்த வாழ்வுபெற்று அமைதியுற்றார்.

சைவமும், தமிழும் வாழ அன்னார் ஆற்றிய தொண்டுகளுக்காக நெஞ்சத்திருத்தி நினைவுகூர்வோம். ●

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று, காலை, 9.00, மணிக்கு யாழ் செயலக விளையாட்டுத்துறை பணிமனையில் இடம் பெறவுள்ளது

இக் கலந்துரையாடலிற்கு விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு விளையாட்டுத்துறை பணிமனையின் பொறுப்பதிகாரி ஏ. எவ். ஜே. ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (உ-16)

### தந்தை செல்வா நினைவாலயத்துக்கு சுற்று மதில்

(தென்மராட்சி)

தந்தை செல்வா நினைவாலயத்துக்கு சுற்றுமதில் அமைப்பதற்கான ஏற்பாடுகளை தந்தைசெல்வா நினைவு அறங்காவல்குழு மேற்கொண்டுவருகின்றது.

இச்சுற்றுமதில் அமைப்பதற்கு தமிழர்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா இவ் வருடத்துக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டநிதியில் இருந்து 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடுசெய்துள்ளார். (உ-77)

### கிறிஸ்து பிறப்பையொட்டி போட்டிகள்

(ஈச்சமோட்டை)

கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை முன்னிட்டு, புனித அன்னாள்ஆலய இளைஞர் மன்றத்தினர்கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

மதவேறுபாடின்றிஇளைஞர் யுவதிகள் இப்போட்டிகளில் பங்கேற்கமுடியும்.

வெற்றிபெறும்முதல் மூன்று போட்டியாளர்களுக்கும்பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (உ-59)

## கழிவு நீர் வாய்க்காலில் பிளாஸ்ரிக் கழிவுகள்

### சுத்திகரிப்புக்கு இடையூறு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் பணிக்கு இடையூறு விளைவிக்க வேண்டாமென யாழ்.மாநகர சபை முதல்வர் எஸ். கந்தையன் நவீன சந்தைப் பகுதி வர்த்தகர்களைக் கேட்டுள்ளார்.

நவீன சந்தைப் பகுதியில் உள்ளகழிவு, வாய்க்கால்களில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் வகையிலான கழிவுகளை வர்த்தகர்கள் வீசுகின்றனர்.

இதனால், வாய்க்கால்கள் அடைபடுவதோடு, சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் சிரமமடைகின்றனர் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (உ-16)

## பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக்கோரி

## கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குமாறு கோரி 5 ஆயிரம் கையெழுத்துக்களை திரட்டும் முயற்சியில் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான அமையம் ஈடுபட்டுள்ளது.

இச்சட்டத்தினைப்பயன்படுத்தி இலங்கை அரசு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாகவும் இவ் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்குமாறு கோரியும் இதன் கீழ் கைது செய்யப்பட்டவர்களை பொதுசட்டத்தின் கீழ் விடுதலை செய்யக் கோரி 5 ஆயிரம் பேரிடம் கையெழுத்து திரட்டிய மகஜர் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (உ-7)

### 'இரத்த நதியில் பூத்த வெள்ளை ரோஜா' ஆற்றுகை

(மந்திகை)

நிரந்தர சமாதானத்திற்கான கலைப் பயணம் மேற்கொண்டுள்ள தமிழீழ கலைக் கல்லூரி மாணவர்கள், ''இரத்த நதியில் பூத்த வெள்ளை ரோஜா'' என்ற வீதி நாடகத்தை வடமராட்சிப் பகுதியில் தற்போது ஆற்றுகை செய்துவருகின்றனர். (உ-23)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2002

## General Certificate of Education (Ord. Level) Model Examination - 2002

கணிதம்- 11
ஒரு மணித்தியாலம்

ஆக்கம்: திரு.சச்சிதானந்தம்
அதிபர்
(நடேஸ்வராக் கல்லூரி)

### நேற்றைய தொடர்ச்சி....

2. அ) $^2/_3 \log (^8/_{125}) + 1\,^1/_3 \log 27 - 4 \log {^3/_5}$ இன் பெறுமதியை மடக்கை அட்டவணையைப்பயன்படுத்தாது காண்க.

ஆ) $\dfrac{151.3 \times (0.9854)^2}{\sqrt[3]{27.05}}$ என்னும் கோவையின் பெறுமதியை மடக்கை அட்டவணையைப் பயன்படுத்திக் கண்ட கிட்டிய முழு எண்ணிற்கு மட்டந் தட்டுக.

3. அ) AB = 10 cm ஆகவுள்ள கோட்டை வரைக.
ஆ) BC = 4 cm ஆகவும் ABC = 40° ஆகவும் உள்ள கோட்டை வரைக.
இ) BC I விட்டமாக் கொண்ட வட்டத்தை அமைக்க. இது AB I X இல் வெட்டுகின்றது. இவ்வட்ட மையம் O ஆகும்.

ஈ) இவ்வட்டத்திற்கு C இலான தொடலியை அமைக்க. இது BA இல் வெட்டுகின்றது

உ) $O\hat{X}B$ $P\hat{C}X$ $O\hat{X}C$ ஆகியவற்றை அளந்து எழுதுக.

4. i) பைதகரசின் செங்கோண முக்கோணி பற்றிய தேற்றத்தைஎழுதுக.
ii) செங்கோண முக்கோணி ஒன்றின் ஒரு பக்க நீளம் 15 cm ஆகும். அதன் ஏனைய இரு பக்க நீளங்கள் 1 cm வித்தியாசமுடையன எனின் அவ்விரு பக்க நீளங்களையும் காண்க.
iii) $\hat{B}$ = 90° ஆகவுள்ள ABC△ யில் BC இன் நடுப்புள்ளி P ஆகும். P யிலிருந்து AC இற்கு வரைந்த செங்குத்தின் அடி Q ஆகும்.
அ) △ABC இல் $AB^2$ இற்கு ஒரு கோவையைப் பெறுக.
ஆ) $AQ^2, QC^2$ ஆகியவற்றிற்கும் இதேபோன்ற கோவைகளைப்பெறுக.
இ) $AB^2 = AQ^2 - QC^2$ என நிறுவுக.

5. அ) ஒரு கூட்டல் விருத்தியின் 4 ம் உறுப்பு 5x + 2 ,அவ்விருத்தியின் 7வது உறுப்பு 5x + 20 எனின்
i) அத்தொடரைக் காண்க.
ii) இத்தொடரின் 10 ம் உறுப்பு யாது?
iii) இத்தொடரின் முதல் 10 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.
ஆ) ஒரு பெருக்கல் விருத்தியின் 1ம் உறுப்பு 60. அதன் மூன்று உறுப்புக்களின் கூட்டுத்தொகை 45. அவ்விருத்தியின பொது விகிதத்தைக் காண்க.

6.
அருகே உள்ள உருவானது மாவீரர் ஒருவருக்குச் சிலைஅமைபபதற்காக நிலத்திற் கட்டப்பட்ட ஒரு பீடத்தின் கிடைத் தோற்றத்தைக் குறிக கின்றது. நடுவே உள்ள சிறிய சதுரத்தின் மூலைவிட்டத்தின் நீளம் 2x மீற்றராகும்.



அ) i) சிறிய சதுரத்தின் பரப்பளவு யாது?
ii) சிறிய வட்டத்தின் பரப்பளவு யாது?
iii) பெரிய சதுரத்தின் பரப்பளவு யாது?
iv) பெரிய வட்டத்தின் பரப்பளவு யாது?
ஆ) x = 1 m ஆகவும் ஒவ்வொரு பகுதியும் 0.98 m உயரமும் உடையதாகவிருப்பின் இப்பீடத்தை அமைக்க எவ்வளவு கனவளவு கொங்கிறீற் தேவை எனக்காண்க.

7. அ) $y = x^2 - 4x + 3$ என்னும் வரைபை வரையும் பொருட்டு கீழுள்ள அட்டவணையை நிரப்புக.

| x | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| y | 15 | | | 0 | | | 3 | 8 | 15 |

ஆ) அட்டவணைக்குரிய புள்ளிகளை ஆள்கூற்றுத் தளத்திற் குறித்து ஒழுங்கான வளையியை வரைக.
இ) இவ்வளையியின் திரும்பற் புள்ளி யாது?
ஈ) இதன் சமச்சீர்க் கோடு யாது?
உ) இச் சார்பு நேராகவும், அதிகரித்தும் செல்லும் x இன் பெறுமான வீச்சைக் காண்க.
ஊ) இவ்வரைபைப் பயன்படுத்தி $x^2 - 4x - 2 = 0$ என்னும் சமன்பாட்டின் தீர்வைக் காண்க.

8. அ) ஒரு முக்கோணியின் இரு பக்கங்களின் நடுப்புள்ளிகளை இணைக்கும் கோடு மூன்றாவது பக்கத்திற்குச் சமாந்தரமாகவும் அதன் அரைப் பங்காகவும் இருக்கும் என நிறுவுக.

ஆ) ABCD ஓர் இணைகரம். அதன் மூலைவிட்டங்கள் O வில் இடைவெட்டுகின்றன. பக்கங்கள் AB, CD ஆகியவற்றின் நடுப் புள்ளிகள் முறையே X,Y ஆகும்.XOY ஒரு நேர்வரை என நிறுவுக.

9. அ) ஒரு கலவையில் ¼ பங்கு நீர். மீதி பாலாகும். 8 லீற்றர் நீரை இக்கலவையுடன் கலந்தால் புதிய கலவையில் $^5/_8$ பங்கு நீராகும். கலவையிலுள்ள பால் எத்தனை லீற்றர் எனக் காண்க?

ஆ) ஒரு பெட்டியினுள் 7 சிவப்புநிற எண்ணிகளும் 5 நீல நிற எண்ணிகளும் உண்டு.எழுமாற்றாக ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு எண்ணிகள் எடுக்கப்படுகின்றன. ஆனால் மீள வைக கப்படுவதில்லை.




i) அருகேயுள்ள மர வரிப்படத்தைப் பிரதி செய்து A,B,C,D ஆகிய பெட்டிகளினுள் வரவேண்டிய பின்னங்களைக் காண்க.
ii) இரண்டும் சிவப்பு நிறமாக இருப்பதற்கானநிகழ்தகவைக் காண்க.

10. A ,B என்பன கிடையான தரையில் 7 km இடைத் தூரத்திலுள்ள இரு விமானஅவதானிப்பு நிலையங்களாகும். குறித்த ஒரு நேரத்தில் AB யிலுள்ள ஒரு குறித்த புள்ளிக்கு நிலைக்குத்தாக மேலே விமானம் ஒன்று காணப்படுகின்றது. அவ்வேளையில் A யிலிருந்து அவ்விமானத்தின் ஏற்றக்கோணம் 35° , விமானத்திலிருந்து நோக்கும் போது B யின் இறக்கக்கோணம் 43°.

i) அவ்வேளையில் தரையிலிருந்து விமானத்தின் உயரத்தைக கணித்தறிக.
ii) விமானம் B யிற்கு மேலே அதேயளவு உயரத்தில் வருமாயின் Aயிலிருந்து அதன் ஏற்றக்கோணத்தைக் காண்க.

### நேற்று வெளியான கணிதம் பகுதி 1 இன் விடைகள .....

1. 0.09
2. 2
3. 3
4. 110000
5. 1/10
6. 0.050
7. 0.058km
8. 60° ஆல திருப்பும் போது.
9. 3ab-1.1xy.
10 $7.45 \times 10^{-3}$
11. 3.0850
12. ரூ.2250
13.80km/h
14.(x-6)(x-4)
15. $^{(t-a)}/_d + 1$
16.3
17.8cm
18.அ.-3
ஆ. -1
19.$^1/_4$
20.$(0.5)^2, 0.5, 5, 5^2$
21. அ.A=D
ஆ.n(B)=n(C)
22.Y=20-5x
23.
அ.36°
ஆ.54°
24.
அ.150
ஆ.ரூ.270
25.48cm
26.8V
27.229
28.18துண்டுகள், 1m
29.ரூ12
30.q=28°
p=62°

### 30.10.2002 வெளியான விவசாய விஞ்ஞான விடைகள ..............

#### பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 11 | 2 | 21 | 2 | 31 | 3 |
| 2 | 3 | 12 | 1 | 22 | 2 | 32 | 1 |
| 3 | 1 | 13 | 2 | 23 | 1 | 33 | 4 |
| 4 | 4 | 14 | 3 | 24 | 3 | 34 | 3 |
| 5 | 3 | 15 | 3 | 25 | 4 | 35 | 1 |
| 6 | 1 | 16 | 4 | 26 | 3 | 36 | 2 |
| 7 | 3 | 17 | 3 | 27 | 2 | 37 | 2 |
| 8 | 3 | 18 | 2 | 28 | 1 | 38 | 3 |
| 9 | 4 | 19 | 1 | 29 | 4 | 39 | 4 |
| 10 | 2 | 20 | 4 | 30 | 3 | 40 | 4 |

அன்பு மாணவர்களே!

பிரபல ஆசிரியர்களால் தயாரித்து வலம்புரியில் வெளியடப்பட்டக.பொ.த சாதாரண தர மாதிரிப் பரீட்சை வினாத் தாள்கள் தேவையான மாணவர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் வலம்புரி அலுவலகத்துடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும்.

ஆசிரியர்(கல்வி)
வலம்புரி
இல.15, வெள்ளாந் தெரு,
யாழ்பாணம்.

# மக்களின் மீள்குடியமர்வு விடயத்தில் அரசு தலையிடத்தவறினால் ஆதரவை மீள்பரிசீலனை செய்ய காங்கிரஸ் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

அமைதியையும் சமாதானச் சூழலையும் விரும்புகின்ற தமிழ்மக்களுக்கு எதிரான பேரினவாதச் சக்திகளின் போக்கைச் சர்வதேச சமுகம் புரிந்துகொண்டுதமிழ் மக்களை பாதுகாக்க முன்வர வேண்டும் அத்துடன் தமிழர்களின் சுதந்திரமான வாழ்வுக்கு வழிகாண வேண்டும் என்றும் சர்வதேச நாடுகளை கேட்டுக்கொள்கின்றோம்.

அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் செயற்குழுக் கூட்டம் கடந்த ஞாயிறன்று தலைவர் விநாயகமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற போது மேற்கண்டதீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றைய தீர்மானங்களாவன.

அரசாங்கம் பயங்கரவாதச் சட்டத்தை நீக்காமல்இருந்தமையே தேசியத்தலைவருக்கு இருநூறுஆண்டுகள் சிறை என்ற நகைப்பிற்கிடமான நிலைமைவருவதற்குகாரணம் எனலாம் எமது கட்சிபயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும்படி நீண்டகாலமாக அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றது இந்தக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருந்தால் இப்படியான நகைப்பிற்கிடமான சூழ்நிலைஉருவாகி இருக்கமுடியாது.

இத்தகைய சூழ்நிலையானது சமாதானத்தின் எதிரிகளுக்கு வாய்ப்பாகிவிடும் எனவே அரசாங்கம் அநீதியான பயங்கரவாதச் சட்டத்தை நீக்கி இச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களையும் தண்டிக்கப்பட்டவர்களையும் உடனடியாக விடுதலை செய்யமுன்வர வேண்டும்.

புலிகளோடு புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு வந்து சமாதானப் பாதையில் சென்று கொண்டுஇருக்கும் இந்த அரசாங்கத்தை வீழ்த்த நாம் ஒருபோதும் உடன்பாடனவர்கள் அல்ல.

ஆயினும் தமிழ்த்தேசிய இனம் மீள் குடிஅமர்வதில் எதிர்நோக்கும் பாரியபிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் அதியுயர் பாதுகாப்பு வலயம் மற்றும் அதியுயர் பாதுகாப்பு வலயம் அல்லாத பகுதிகளிலும் பொதுமக்களின் குடியிருப்புக்களில் இராணுவம் நிலை கொண்டிருப்பதே அந்தபபிரச்சினை ஆகும்.

இந்நிலையில் அரசாங்கம் தலையிட்டு இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணத்தவறுமானால் நாங்கள் எங்கள் நிலைப்பாட்டினை மறுபரிசீலனை செய்யவும் தயங்கமாட்டோம்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் பாரபட்சமற்ற நிதியுதவி வழங்கப்பட வேண்டும் பாகுபாடுஇன்றி உரிய நட்டஈடு அனைவருக்கும் வழங்கப்படுவதை அரச அதிகாரிகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அண்மையில் அம்பாறையில் காஞ்சிரங்குடா பகுதியிலும் அதனைத்தொடர்ந்து திருகோணமலையிலும் தமிழர்களின் இன்னுயிர்கள் பல பறிக்கப்பட்ட கொடுமையும் தமிழ்இளைஞர்கள் பல இரத்தம்சிந்திய கொடுரத்தையும் மிகவும் வன்மையாக தமிழ்க் காங்கிரஸ் செயற்குழு கண்டிக்கிறது. புரிந்துணர்வு உடன்படிக்கையை புரிந்துகொள்ள மறுக்கின்ற ஜென்மங்கள் புரிந்நான செயல் இதுவாகும் அமைதியும் சமாதானமும் நிலவும் இன்றைய சூழ்நிலையில் அதிரடிப்படையால் திட்டமிட்டு செய்யப்பட்ட இச்செயலை சர்வதேச சமுகம் கண்டிக்க முன்வர வேண்டும்.

(உ.)

## சந்தேகத்தின் பேரில் மற்றொருவர் கைது

(மந்திகை)

பருத்தித்துறை இராணுவ முகாம் ஆர்ப்பாட்ட பேரணியின் போது சேதமாக்கப் பட்டதா கூறப்படும் சம்பவம் தொடர்பான சந்தேகத்தின் பேரில் ஏழாவதுநபரும்பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அல்வாய்வடக்கைச்சேர்ந்த பாலஜோதிஎன்ற இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செப்ரெம்பர்மாதம் பருத்தித்துறை இராணுவ முகாம் முன்பாக மாணவர்களும் பொதுமக்களும் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போதுஇராணுவ முகாம் சேதமாக்கப்பட்ட சம்பவம்தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வந்த பொலிசார். ஏற்கனவே ஆறுபேரை கைது செய்து விசாரணையின் பின்னர் விடுவித்துள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி கைது செய்யப்பட்ட மேற்படி நபரை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது எதிர்வரும் 11ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

(உ-23)

## கிழக்கு மாகாணத்துக்கு தனியாக ஆளுநர் நியமிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்துக்கு தனியாக ஆளுநர் ஒருவரை நியமிக்குமாறு கோரி 'தேசிய கூட்டமைப்புபேரவை' ஜனாதிபதிசந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

பேரவையின் பிரதான அமைப்பினரான பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன இது குறித்து கருத்து தெரிவிக்கையில்;

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடமும் இவ்வாறானதொரு வேண்டுகோளைவிடுத்திருப்பதாக தெரிவித்துள்ளார்

அவசர காலச் சட்டத்தின் கீழ்ஒன்றிணைக்கப்பட்டவட-கிழக்கு மாகாணம்,தற் போது அவசரகாலச் சட்டம் இல்லாத நிலையில் ஒன்றிணைந்து இருக்கமுடியாது.

இதனால் இரண்டு மாகாணங்களுக்கும் தனித்தனியாக ஆளுநர் நியமிக்கப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேசிய கூட்டமைப்பு பேரவை இவ்விடயம் தொடர்பாக மக்களுக்கு விளக்கம் அளித்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(உ-8)

## சின்னமருவில் கொலறாத் தாக்கம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சின்ன மடுப்பகுதியில் கொலறா நோயினால் பாதிக்கப்பட்ட இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, இப்பகுதியில் கொலறா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ- 75)

## யு.என்.எச்.சி.ஆர் உதவி

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பகுதியில் இருந்து மீளக் குடியமர்ந்த ஜே/110, ஜே/111, ஜே/112, ஜே/113, ஜே/114 கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு யு.என். எச்.சி.ஆர். நிறுவனத்தினால் நேற்றைய தினம்நல்லூர்கலாசாலை வீதி சனசமூக நிலையத்தில் வைத்து வீட்டுப்பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

(உ-9)

## கட்டாக்காலிகளின் உரிமையாளரிடம் தண்டம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில்கட்டாக்கலிகால்நடைகள் பயிர்வகைகளை அழித்துவருவது குறித்துதனக்குகிடைத்து வரும்முறைப்பாடுகளின் பிரகாரம், தன்னிச்சையாகத்திரியும்கால்நடைகள்பிடித்துக்கட்டப்படவுள்ளதாகவும்,

அதன்உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிடத் தீர்மானித்திருப்பதாகவும் நல்லூர்பிரதேச சபைத்தலைவர் அறிவித்துள்ளார்.

(உ-9)

## ஜனாதிபதிபாதுகாப்புப்பிரிவு அதிகாரிகள்மீது விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் முக்கிய அதிகாரிகள்சிலர் பொலிஸ்மா அதிபரின் உத்தியோக பூர்வ அலுவலகத்தில் வைத்து விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

ஜனாதிபதிபாதுகாப்புபிரிவு உத்தியோகத்தர்கள் மேற்கொண்டதாக கூறப்படும் சில சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாகவே நேற்று முன் தினம் முதல்விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

இதற்கமைய ஜனாதிபதிப் பாதுகாப்பு பிரிவின்முன்னாள் பணிப்பாளர் நிகால் கருணாரட்ண நேற்று முன் தினம் பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

பெத்தகானி சஞ்சீவவுடனான அவரது தொடர்பு, சஞ்சீவனின்வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட பொருள்கள், வாகனங்கள் ஆகியனதொடர்பாகவே விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, பொலிஸ்மா அதிபரின் உத்தியோக பூர்வ அலுவலகத்தில் சந்தேக நபர் ஒருவரை விசாரணைக்குஉட்படுத்தியது இதுவே முதற் தடவை ஆகும்.

கடந்தகாலங்களில் வழமையாக குற்றப்புலனாய்வுப் பிரிவுதலைமையலுவலகத்தில் தான் சந்தேகநபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவது வழமை.

ஆனாலும், இவர்கள்மீதான விசாரணைகள்உயர் அதிகாரிகளின்உத்தரவுக்கு அமையவே, பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்தில் நடத்தப்பட்டு வருகின்றன

(உ-8)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயகக் கட்சியின் 4வது தேசிய மாநாட்டையொட்டிய பொதுக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை பி. ப 3. 30மணிக்கு சிற்றி ஹோலில் கட்சியின் பொதுச் செயலாளர் சி. க. செந்திவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

(உ)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்திவரும் வாராந்தநிகழ்வுகளில், நாளை வெள்ளிக்கிழமை மு ப 10. 30மணியளவில் சைவப்புலவர் நித்தியதசீதரனின் ''கந்தன் கருணை'' என்னும் தலைப்பிலான சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

(உ- 75)

## நீர்கொழும்பு சிறைக்கு ரவிராஜ் எம். பி. விஜயம்

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் விடுதலை தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் என். கே ரவிராஜ் நேற்று முன் தினம் அங்கு சென்றுள்ளார்.

பல்வேறு பட்ட சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள 16 பேரில் ஐவர்ஜாஎல குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகவும் இருவர் கட்டுநாயக்கா வான்படைத் தளம் மீதான தாக்குதல் தொடர்பாகவும் சந்தேகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் ஏனையவர்கள் வழக்கு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுதலை செய்வது தொடர்பாக சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

(உ-7)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

களுத்துறையில் இடம்பெறவுள்ள வடக்கு, தெற்கு சமாதான விளையாட்டு விழாவில் பங்கேற்கவுள்ள யாழ். குடாநாட்டு வீரர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

(உ-6)

## வரவு செலவுத்திட்டத்தை ஆதரிப்பதா? இல்லையா? கூட்டமைப்பு கூடிமுடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியமுன்னணி அரசின் இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தை ஆதரிப்பதா இல்லையா என்பது தொடர்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடி ஆராயவுள்ளதாக அகில இலங்கை தமிழ்க்காங்கிரசின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அ. விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளை இதுதொடர்பாக எந்ததீர்மானத்தையும் தமிழர் தேசிய கூட்டமைப்பு எடுக்கவில்லை என கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆர். சம்பந்தன் தெரிவித்துள்ளார்;

அரசாங்கத்தின் புதியவரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்ட பின்னரே அதுதொடர்பான முடிவு எடுக்கப்படும் எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழர்விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீ-ஆனந்தசங்கரி தற்போது சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும் அரசின் வரவுசெலவுத் திட்டத்தை ஆதரிக்கப்போவதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-8)


## கேள்வி அறிவித்தல்.,...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய குறிப்பு:- கேள்விக்காரர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையுடன் மேலதிகமாக பெறுமதி சேர் வரியாக 20% ஐயும் சேர்த்துச் செலுத்துதல் வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். அத்துடன் தனியார் காணிகளில் எதுவித இறைச்சிக் கடைகளுக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

இ. இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்
2002.11 05

(5219)

அறிகொன்று அறியரன் எனினும்உறுதி
உழையிருந்தான் கூறல்கடன்
குறள்

வலம்புரி

## வெறும் வாய் சப்பல்

ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவியேற்று 2 வது வரவுசெலவுத் திட்டம் நேற்றைய தினம் நிதி அமைச்சர் கே.என். சொக்ஸியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டது.

2003ம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ப நேற்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் கணிசமான நலத்திட்டங்களையும் வேலை வாய்ப்புகளையும் மக்கள் எதிர்பார்த்திருந்தனர்.

இந்த எதிர்பார்ப்பை மேலும் தூண்டுவதாக வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் பொது வைபவமொன்றில் நிதி அமைச்சர் சொக்ஸி ஆற்றிய உரை அமைந்திருந்தது.

வரவு செலவுத் திட்டத்தை ஆவலோடு எதிர்பார்த்திருந்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இராணுவக்கட்டமைப்பை நவீனமயப்படுத்தல் என்ற வகையில் கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் பாதுகாப்புச் செலவினம் வரவு செலவுத் திட்டத்தில் கணிசமான பங்கை வகித்துள்ளது.

நாட்டில் வேலையின்மை, பொருளாதார வளர்ச்சியின்மை, வறுமை வருமான சமமின்மை போன்றன தலைவிரித்து ஆடும் போது அவற்றை குறைத்து அல்லது இல்லாதொழித்து பொருளாதார ஸ்திரத் தன்மையை நிலை நிறுத்த வரவு செலவுத் திட்டத்தை தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆனால் நேற்றைய தினம் நிதியமைச்சர் கே. என். சொக்ஸியினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் அவ்வாறான அமைப்புடையதாகக்காணப்படவில்லை.

பொது விலை மட்டங்களின் அதிகரிப்பினூடாக எழுந்த வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மக்களின் மெய் வருமானத்தைக் குறைத்துள்ளது. இந்நிலையில் அரச ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுக்கேற்ப அவர்களுக்கு சம்பள உயர் வழங்கப்படவில்லை.

ஆக, ஏதோ வேலை வாய்ப்பு, அபிவிருத்தி, புனர்வாழ்வு என்றெல்லாம் வசன அலங்காரங்கள் தென்படுகின்றனவே யொழிய ஒட்டுமொத்தத்தில் வெறும் வாய் சம்பும் வரவு செலவுத் திட்டமாகவே இது அமைந்துள்ளது.

# ஆரம்ப வகுப்பு மாணவர் கணித எண்ணக்கரு

# மேல்வகுப்புக் கணிதபாட விருத்திக்கு உதவும்

★ மூ. விக்னேஸ்வரன் ★
கோப்பாய்

ஆரம்ப வகுப்புகளில் கற்றல்கற்பித்தல் செயற்பாடுகள் விநோதமானதாக அமைந்துள்ள அதேவேளையில் விசித்திரமானதும்கூட என்பதை எல்லோர்க்கும் உணர்த்த வேண்டியதும் உணரவேண்டியதும் காலத்தின் தேவையாகும். இச்செயற்பாடானது 10 வீதமான மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்துள்ளதேயன்றி 90 வீதமான மாணவர்களின் அறிவுத் தேவையை பூர்த்திசெய்யத் தவறிவிட்டது என்பதே இன்று ஆரம்பவகுப்பாசிரியர்களில கல்விச் சமூகத்தவர்களால் சுட்டிக்காட்டப்படும் பாரிய குற்றச்சாட்டுகளில் ஒன்றாகஉள்ளது. இது எந்தளவுக்குப் பொருந்தும், பொருந்தாது என்பது வேறு ஆயி ஆரம்பக்கல்வியின் வாழ்வியலில் ஆக்கபூர்வமான சில சிந்தனைகளைக கிளறுவதுடன் மீளிணக்கத்துடன் கூடியவாய்ப்பை உருவாக்குவதே இக்கட்டுரையின் கருதுகோளாகும்.

### பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு முக்கியம்

கடந்தவருட க. பொ. த. சாதாரண பரீட்சையின் கணிதபாட பெறுபேறுகளை நோக்குகையில் யாழ். மாவட்டப் பரீட்சார்த்திகளில் 47 வீதமானவர்கள் கணித பாடத்தில் சித்தியடையத் தவறிவிட்டார்கள் எனப் புள்ளிவிபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதுபற்றிய ஆய்வின் முகப்புரையில் இம் மாணவர்களின் ஆரம்பக்கலவியில் இணக்கப்பாட்டுடன் கூடிய கணித எண்ணக்கரு விருத்தி செய்யப்படவில்லை எனவும், அக்காரணியே பரீட்சைப் பெறுபேறுகளின் வீழ்ச்சிக்குத் துணையாக அமைந்திருக்கலாமெனவும் கல்வித் துறை சார்ந்தோர்கள் தரப்பில் கருத்துகள முன்வைக்கப் பட்டுள்ளன. எனவே இதைச் சீர் செய்வதற்கு ஆரம்ப வகுப்புகளில் மாணவர்களின் வகுப்பறைக் கல்வி நிலையை ஆசுவாசப்படுத்தி கணித பாடக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுடன்கூடியதாக விருத்தி செய்வதில் பாடசாலைஅதிபர்களின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது, என வேகற்பித்தலானது ஆசிரியரின் ஒருவழித்தொடர்பாடலாக அமையாது மாணவர்களுடன் இணைந்து பல்பக்கத் தொடர்பாடலாக அமையும் சிறந்த மீளிணக்கத்தையும் மீள வலியுறுத்தலையுமுடையதாக செயற்பாடுகளுடன் கூடியதாக வகுப்பறைக் கல்வி நிலையை ஏற்படுத்துவது பொருத்தமானதாகும் ஆரம்ப வகுப்புகள் சூழுநிலையாகஒழுங்கமைக்கப்படவேண்டும். இதன் மூலம் மாணவர்களின் செயற் பாடுகள் இலகுபடுத்தப்படுவதுடன் மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை உருவாக்க முடியும். அதன் மூலம் சகோதரத்துவ ரீதியில் மாணவர்கள் பங்காளிகளாகச்செயற்படுவர் எனக் கல்வித்துறை சார்ந்தோரால் விதந்துரைக்கப்படுகின்றது.

### அனுபவங்களை முன்வைத்தல்

ஆரம்பக்கல்வியின் தொடக்க ஆண்டுகளில் கணித எண்ணக்கரு விருத்திமொழி எண்ணக்கரு விருத்திஆகிய இரண்டும்சமமானதாகப் பாடசாலைப்பாட விதானத்தில் ஒழுங்கமைக்கப் பட்டுள்ள முறைகள்கல்விக்குப்பழக்கப் படாத குழந்தைகளுக்கு அடிப்படைக் கணித எண்ணக் கருக்களைக் கற்றுக் கொள்ளக்கூடியவாறானதும் நன்கு திட்டமிடப் பட்டதும்,

ஒழுங்கமைக்கப்பட்டது மான செயல் சார்ந்த செயற்பாடுகளை வழங்குவது வரவேற்கத் தக்கதாகும் அது வரை அவர்கள் பெற்றிராத அனுபவங்களிருப்பின் புதியனவற்றை முன் வைத்தலிலும் அவர்கள் பெற்றுள்ள அனுபவங்களை மேலும் வளப்ப த்தக் கூடிய வகையிலானசெயற்பாடுகளை முன் வைத்தல்மேலும் சிறந்ததாகும்.

கணித பாடத்தில் சிறந்த அறிவுள்ள ஆசிரியராயினும் கூட ஆரம்ப வகுப்புகளில் கணிதம் கற்பிப்பதற்கு அறிந்திருக்க வேண்டிய அனுபவங்கள்பலஉள்ளன. பிள்ளைகளின் நுண்மதி விருத்தியடையும விதம் கற்பிக்க வேண்டிய அடிப்படை எண்ணக்கருக்கள் மாணவர்களைச் சென்றடையும் விதம் கற்றல் கற்பித்தல் நுட்பங்கள் ஊக்குவிப்பு முறைகள் மதிப்பீடு, மீள வலியுறுத்தல், பரிசார முறைகள் என்பன அவற்றுள் சிலவாகும் ஆரம்ப மேற்பிரிவு வகுப்புகளில் பாடப் பொருளை எவ்வாறு கற்பித்தாலும் கூட, பயன்படுத்தப்படும் நுட்ப முறைகள் கீழ்ப்பிரிவிலிருந்தே அனுபவ மூலமாகப் பெற்றிருத்தல் முக்கியமானதாகும். எனவே ஆசிரியர் பாடப் பொருளை எவ்வளவுக்கு அறிந்திருந்தாலும் மேற்கூறப்பட்ட அம்சங்களின் செயற்பாடுகளைதிட்டமிடாதவிடத்து உச்சப் பயனைப் பெறுவதற்கான வாய்ப்பில்லை கேட்பவை மறந்து விடும் காண்பவை நினைவிலிருக்கும் செய்பவை விளங்கும் என்ற மகுடவாசகத்துக்கிணங்க செய்தல் மூலம் கற்றலின் பயனுறுதி எடுத்துக் காட்டப்படுகின்றது தாம் விரும்பும் செயற்பாடுகளி லீடுபட்டு அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பும் சுதந்திரமும் பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்றது. செயற்பாடுகளினூடாக கற்பிக்கும்பிள்ளைகளை குழுவாகப் பிரித்தல் வேண்டும. குழுமுறைச்செயற்றிறன் கற்றலுககுவழிகோலும்முறையொவறாகும என்பது யாமறிந்ததே; குழுச் செயற்பாட்டினால் சமூகத் திறன், கூட்டுணர்வு விருத்தி ஆகியனவிருத்தியடையும்மாறாகப்பழி வாங்கல், பொறாமையுணர்வு ஏற்படாது. செயலாற்றலுடன் செயற்படுவதனால் பிள்ளையின் உடல் உளவிருத்தியுடன் உத்வேகமும் இயல்பாகவே உருவாகும். இவ்வாறான செயற்பாடுகளின் போது கற்றல் பிரச்சினைகளுடைய பிள்ளைகளை இனங்கண்டு தனித் தனிக் குழுக்களாக ஈடுபடச் செய்தல்பொருத்தமானதன்று மேலதிக உதவிவழங்கும் போதோ விசேட வகுப்பு ஒன்றின் போதோ அவர்களைத் தனிக்குழுவாக மாற்றுவது பொருத்தமானதாக அமையும்.

### உபகரணங்களின் பயன்பாடு

ஆரம்ப வகுப்புகளில் கணித பாடக் கற்பித்தலில் உபகரணங்களின் பயன்பாடு முக்கியமான தொன்றாகும். இவ்வுபகரணப்பயன்பாட்டை ஒழுங்கான திட்டமிடல்மூலம்இலகுபடுத்தலாம். இதைத்தயார்ப் படுத்த தாராளமாகமாணவர்களின் ஒத்துழைப்பையும்நாடலாம். உதாரணமாக வடிவங்களைக் கற்பிக்க கடதாசி, கடதாசி மட்டை என்பனஉடனடி நிவாரணியாக அமையும். செவ்வக வடிவமான ஒரு கடதாசியை 5 தடவைகள் மடித்த பின் இதில் எத்தனை துண்டுகள் வெட்டலாம் என வினவினால் மாணவர்களால் பல்வேறு விடைகள் கூறப்படும். இதைக் குழுச் செயற்பாடாக மாற்றி ஒருகடதாசித் துண்டைஉபகரணமாக்கிக்கற்பித்தால், 32 துண்டுகள் வெட்டலாம் எனவும் ஆறு தடவைகள் மடிப்பதன் மூலம 64துண்டுகள் வெட்டலாம் என்றமுடிவுக்குப் பிள்ளை அனுபவ மூலமாகவும் செய்து பார்த்தல் முறை மூலமாகவும் விடையைக்கூற முடியும். அத்துடன் தெளிவான அறிவையும் பெற முடியும். உருவங்களையும் வடிவங்களையும் ஒரு முறைஆக்கிக் கொண்டால் பலதடவைகள் பயன்படுத்தலாம். இவ்விடயத்தில் ஆசிரியர்களிடையே முரண்பாடுகளற்ற இணக்கப்பாடு காணப்படுமேயாயின் ஒரு தொகுதி உபகரணங்கள் பல்வேறு எண்ணிக்கையுடைய மாணவர்களின் பயன்பாட்டுக்கு துணை செய்யும்.

ஆரம்ப வகுப்புகளில் மாணவர்களின் கணித எண்ணக்கரு விருத்தி மேல் வகுப்பு மாணவர்களின் கணித பாட விருத்திக்கு வழிகோலும் எனக் கூறப்படுகின்றது எனவே கனிஷ்ட நிலை, இடை நிலை, உயர் நிலை மாணவர்களின் கணித பாட விருத்திக்கும். வளர்ச்சிக்கும் ஆரமபக்கல்வி நிலையில் களமான, காத்திரமானஅடித்தளத்தை அமைப்பதை சமூக கட்டுமானப் பணியாக ஏற்றுக்கொண்டு ஆரம்பக்கல்வியின் மூலவர்களாகிய நாம் திட சங்கற்பம் கொள்வோம்.


## சாயி அருளமுதம்



ஸர்வவியாபக வஸ்துவுக்கு விசுவாசமுடைய வராயிருங்கள். 'அது' ஆவதற்கு அவாவுறுங்கள். நீங்கள் வேலைவேண்டுமெனவோ, ஆண்குழந்தை வேண்டுமெனவோ அல்லது ஒரு டரிசு விழவேண்டுமெனவோ கடவுளிடம் பிரார்த்திக்கும் போது நீங்கள் தொழில் மீதோ பிள்ளை மீதோ அல்லது பரிசு மீதோ தான் விசுவாசமாயிருக்கிறீர்களே யன்றித் தெய்வத்தின் மீது பக்திசெலுத்தவில்லை. கடவுளுக்காகவே பிரார்த்தியுங்கள். அனபு செலுத்துங்கள்; ஏனெனில் அன்பு செலுத்துவதே உங்கள் இயற்கையாகும். நீங்கள் அன்பைத் தவிரவேறொன்றும் அறியீர்கள். அன்பு செலுத்துதலை விட்டு வேறு விதமாக நடக்க உங்களால் முடியாது, உங்களை விரிவுபடுத்துங்கள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளுங்கள்; அன்பிலே வளருங்கள்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை


## 56 வரவுசெலவுத்திட்டங்கள் இதுவரை சமர்ப்பிப்பு

ஐக்கிய தேசிய முன்னணி அரசு நாட்டின் 56 வது வரவு செலவுத் திட்டத்தை நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்தது. இதனை நிதி அமைச்சர் கே' என். சொக்ஸி சமர்ப்பித்திருந்தார்.

இலங்கை சுதந்திரம்பெற்ற காலம் தொட்டு இன்று வரையுள்ள 54வருடங்களில 16 நிதியமைச்சர்கள் வரவுசெலவுத் திட்டங்களை பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ளனர்.

இலங்கையின் முதலாவது வரவு செலவுத்திட்டம் 1954 ஆம் ஆண்டு, அப்போதைய நிதியமைச்சராக இருந்த ஜே ஆர் ஜெயவர்த்தனா வினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வரவுசெலவுத் திட்டமே நாட்டின் மேலதிக வருமானத்தை காட்டிய முதலாவது வரவு செலவுத் திட்டமாகும்.

இது வரைகாலமும் பாராளுமன்றில் வரவு செலவுத் திட்டங்களை சமர்ப்பித்தஅமைச்சர்களுள் என். எம். பெரேரா முக்கியம் இடம் பெறுகிறார்.

நிதியமைச்சர் பதவியில் அதிக காலம் இருந்த வரும், அதேவேளை பலவரவு செலவுத்திட்டங்களை பாராளுமன்றில் சமர்ப்பித்தபெருமையும் றொனிடிமெலலுக்கு உரியது. இவர் 11 வருடங்கள் இப்பதவியை வகித்துள்ளார்.

பிரதி நிதியமைச்சராக இருந்த ஒருவர் பாராளுமன்றில் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தபெருமை பேராசிரியர் ஜி. எல். பீரிஸை சாரும்.

கடந்த 2000ஆம் ஆண்டில் முதல்முறையாக ஜனாதிபதி ஒருவரால் வரவு செலவுத்திட்டம்சமர்ப்பிக்கப்பட்டுளளது. அப்போது ஜனாதிபதியாகவும் நிதியமைச்சராகவும் இருந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவே வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருந்தார். (உ8)

# உரிய நேரம் வரும்போது ஐ.தே.முன்னணி அரசை சேவையிலிருந்து அகற்றுவேன்

## கல்வி அமைப்பாளர்கள் மத்தியில் ஜனாதிபதி சூளுரை

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வருமாறு ஐ.தே.முன்னணி அரசாங்கம் தன்னைக் கேட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார், கட்சியின் அமைப்பாளர்கள் மத்தியில் பூட்டிய அறையினுள் நடந்த கூட்டமொன்றில் இதனைத் தெரிவித்த ஜனாதிபதி, தான் இந்த கோரிக்கையை ஏற்கத்தயார் என்றும் ஆனால் அதற்கு இரண்டு நிபந்தனைகள் நிறை வேற்றப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஒன்று பொ.ஐ.மு அங்கத்தவர்கள் துன்புறுத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், மற்றையது சமாதானப் பேச்சுக்களின் ஊடாக அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு எவற்றை வழங்கவிருக்கின்றது என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

இவற்றிற்கான பதிலை ஐ.தே.மு வினர் இன்னும் தெரிவிக்கவில்லை உரிய நேரம் வரும் போது இந்த அரசாங்கத்தை நாம் சேவையிலிருந்து அகற்றி விடுவோம், எனது அதிகாரங்களைப் பறிக்க இடமளிக்கமாட்டேன், இன்று துப்பாக்கிகள் ஓய்ந்துள்ளதைப் பார்க்க மகிழ்ச்சியாகவுள்ளது. ஆனால் மீண்டும் யுத்தம் வெடிக்குமாயின் ஆயுதப்படைகளின் பிரதம தளபதி என்ற வகையில் முழு அதிகாரங்களையும் நான் பயன்படுத்துவேன்.

இவற்றை கருத்திற் கொண்டு அவர்கள் எனது அதிகாரங்களைக் குறைப்பதற்கு முயற்சிகளை எடுத்து வருகின்றனர். (இ)

### தாளையடியில்......

யோகன், பொறுப்பாளர் பரணி, தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டப்பணிப்பாளர், லோறன்ஸ் கிறிஷ்ரி, தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரதிப்பணிப்பாளர் இனியவன், வெண்புறா நிறுவன அமைப்பாளர் அன்ரனி, தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ்மாவட்ட பொறுப்பாளர் வரன் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (ம)

### திருமலையில்......

கடற்பிரதேசத்தில் இடம் பெற்ற சம்பவங்கள் போன்று இனிமேல் நடைபெறாதவாறு பார்த்துக் கொள்வதென்றும் உறுதியளிக்கப்பட்டது. (ம)

# பிரபாவுக்கு விதித்த தீர்ப்பை வாபஸ் பெறக் கோரிப் பேரணி

## மட்டக்களப்பில் நேற்று நடந்தது

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் விதித்த 200வருட சிறைத்தண்டனையை எதிர்த்தும் அதனை வாபஸ் பெறக் கோரியும் நேற்று மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம் பெற்றது.

மட்டக்களப்பு அபிவிருத்திச் சங்கங்களின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியிலிருந்து காந்தி சதுக்கம் வரை நடை பெற்ற இப் பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்ட மக்கள் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராகவும், அந்தத்தீர்ப்பை வாபஸ் பெறக் கோரும் வாசகங்களையும் கொண்டு சென்றனர்.

பேரணியின் முடிவில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.சண்முகத்திடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கான மகஜர் ஒன்றையும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் ஒன்றியத்தலைவர் ராஜன் சத்தியமூர்த்தி கையளித்தார். (ந-5)

### இனப்பிரச்சினை....

சமஷ்டி அமைப்பு முறையிலான அதிகாரப்பகிர்வு குறித்து ஆராயப்படவுள்ளது.

(வ)

### அரச ஊழியர்கள்......

இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு ஒன்பது மாதங்களின் பின் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த வரவு செலவுத்திட்டத்தில் கிராமிய பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கு சுமார் 60கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது. என்று அமைச்சர் தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் தெரிவித்திருப்பதாவது:-

வெளிநாடுகளில் ஒருவருட காலத்திற்கு மேல் வேலை செய்பவர்களுக்கு அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் திகதி முதல் 1750 அமெரிக்க டொலர்கள் தீர்வை அற்ற சலுகை வழங்கப்படும் நடுத்தர வருமானமுள்ளவர்களுக்கு தனியார்வீடமைப்பு திட்ட வகைகளை விருத்தி செய்ய ஊக்குவிப்பு வழங்கப்படும்

வாகனங்கள் மீது நியாயமான வரி விதிக்கப்பட்டு வீதி நிதியம் ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது. வாகன உத்தரவுப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படும் போது அல்லது, விநியோகிக்கப்படும் நேரத்தில் அடுத்த ஆண்டு முதலாம் திகதி முதல் இந்த வரி விதிக்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் மோட்டார் சைக்கிள் கார், முச்சக்கர வண்டிகள் என்பன மீது 350ரூபாவும் ஏனைய வாகனங்களுக்கு வருடாந்த வரியாக 100ரூபாவும் அறவிடப்படும்.

இலங்கையிலிருந்து அல்லது இலங்கைக்கு சர்வதேச விமானம் மூலம் பயணம் செய்பவர்கள் ஒவ்வொரு பயணச்சீட்டிற்கும் தற்போதுள்ள பத்து டொலர் வரிக்கு மேலதிகமாக ஐந்து டொலர் வரியாக செலுத்த வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான உதவித் தொகையுடன் கூடிய ஓய்வூதியத்திட்டம் ஒன்றும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் அமுல் செய்யப்படவுள்ளது.

திஸ் ஸாதெய் வேந்திரா சம்பள ஆணைக்குழுவின் சம்பள சிபார்சு அறிக்கையில் சமபள அதிகரிப்புக் குறித்து விதந்துரைத்துள்ளதுடன், அரச உத்தியோகத்தர்களின் பதவிகளில் 30சதவீதக் குறைப்பினையும் அது சிபார்சு செய்துள்ளது இதனால் உருவாககூடிய தொழில் இன்மை பற்றி எதுவும் அதில் கூறப்படவில்லை எனவே இதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக .அரசாங்கம் தீர்மானம் எடுக்கவேண்டி உள்ளது. என்றும் அமைச்சர் தனது வரவு செலவுத்திட்ட உரையின் போது தெரிவித்துள்ளார்.

அத்துடன் 2003ம் ஆண்டிற்கான இந்த வரவு செலவு திட்டத்தின் மூலம் நாட்டின் சமாதானத்திற்கு நல்லதொரு அடித்தளம் இடப்பட்டிருப்பதுடன், நாட்டின பொருளாதார அபிவிருத்திக்கு உள்நாட்டு தொழில் துறையும் வெளிநாட்டு முதலீடுகளையும், வேலைவாய்ப்பை அதிகரிக்கக் கூடிய நீண்ட கால வேலைத்திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

**சம்மாந்துறைப்பகுதி சம்பவத்தின் எதிரொலி**

# அரச சமாதான செயலக பெயர்ப் பலகை நொருக்கப்பட்டது

(அம்பாறை)

சம்பாந்துறைப் பகுதியில் முஸ்லிம் மாணவன் ஒருவன் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக அப்பகுதியில் அமைந்திருந்த அரச சமாதான செயலகப் பெயர்ப் பலகை கடந்த திங்களன்று அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

மாணவன் கடத்தப்பட்டமை தொடர்பாக மாணவனது உறவினர்கள் சமாதான செயலகத்தில் முறையிட்டிருந்தனர் மறுநாள் திங்கட்கிழமை இது தொடர்பான தகவல்களை வழங்குவ்தாக செயலக அதிகாரிகள் உறுதியளித்திருந்தனர்.

அன்றைய தினம் மாணவனது உறவினர்கள் சமாதான செயலகத்திற்குச் சென்றிருந்த போது சமாதான செயலகம் மூடப்பட்டுக் கிடந்ததினால் ஆத்திரமடைந்த உறவினர்கள் செயலகத்தின் பெயர்ப் பலகையை அடித்து நொருக்கியுள்ளனர்.

இதேவேளை இச்மாதான செயலகத்தில் துறைமுக அதிகார சபையில் ஏற்கனவே பணிபுரிந்த 13பேர் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது. (த-15)

# உயர் நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்து இன்று வவுனியாவில் பேரணி

(வவுனியா)

தமிழீழ வீடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் 200 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளமையை ஆட்சேபித்து இன்று வவுனியாவில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடை பெறவுள்ளது.

வவுனியா வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள இந்த ஆர்ப்பாட்ட பேரணி இன்று காலை 10மணிக்கு வவுனியா ரம்பைக் குளத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு வவுனியா மாவட்ட செயலகத்தில் முடிவடையவுள்ளது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் வெகுஜன அமைப்புக்களின்ஒன்றியத்தினால் மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன. (ம)

### முஸ்லிம்களின் கோரிக்கைக்கு......

மாவட்ட அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கல்விமான்கள், மதத்தலைவர்கள் பிர.தேசே பிரமுகர்கள் மற்றும் விடுதலைப்புலிகள் அமைப்பின் பிரதி நிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசும் விடுதலைப்புலிகளும் சமாதானத்தை நோக்கி நகரும் இவ்வேளையில் முஸ்லிம் மக்களுக்கென தனியான கரையோர மாவட்டம், மற்றும் கச்சேரி ஆகியன அமைக்கப்படுவது அவசியமற்ற நடவடிக்கை என்று கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தினை தரமுயர்த்துவது நாவிதன் வெளி, காரைதீவு பிரதேசசபைகளை தனியாகப் பிரிப்பது உடனடியாக இடம் பெறவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ)

### உயர் நீதிமன்ற......

பேரணிக்கு ஆதரவளிக்கும் வகையில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவு, மற்றும் போக்குவரத்துப் பிரிவினர், கல்வித்துறை, வர்த்தகத்துறை, வங்கி நிதித்துறை சார்ந்தவர்கள் அனைவரும் தமது சேவைகளை இடைநிறுத்தி பேரணியில் கலந்து கொள்ளுமாறு பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பேரணிக்கு ஆதரவு தெரிவித்து குடாநாட்டின் பொது அமைப்புக்க்ள் பல அறிக்கைகள் வெளியிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)


வலம்புரியின்

**கல்விச் சேவை**

அன்பார்ந்த அதிபர்களே!

யாழ். மாவட்டத்தில் இயங்கி வரும் பாடசாலைகளின் தோற்றம், அவற்றின் சமூகப்பிணைப்பு, நிறுவுனர் பற்றிய குறிப்பு, மாணவர்கள் படைத்த சாதனைகள், தற்போது பாடசாலையின் வளர்ச்சி, தேவைப்பாடுகள் என்பனவற்றை வெளிப்படுத்தி வரலாற்று ரீதியாக ஆவணப்படுத்தும் முயற்சியில் வலம்புரியின் கல்விக்குழு ஈடுபட வுள்ளது.

வாரத்தில் ஒருநாள்
வலம்புரியில் வலம் வரவிருக்கும்
**"எங்கள் கல்விச்சாலை"**
பகுதியில் உங்கள் பாடசாலையும்
இடம்பெற வேண்டுமாயின்
உங்கள் சம்மதக்கடிதத்தை

"எங்கள் கல்விச்சாலை"
வலம்புரி
இல.15 வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
வலம்புரியின் கல்விக்குழுவினர் தங்களின் பாடசாலைக்கு நேரில் விஜயம் செய்வர்.

**அன்புசால் அதிபர்களே!**

உங்கள் பாடசாலைகளின் பழம் பெருமைகளை வெளிப்படுத்த வலம்புரி தரும் அரியவாய்ப்பைத் தவற விடாதீர்கள்.

ஆசிரியர்



சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
சுத்தமானநல்லெண்ணெய்

**V.S.P ஸஞ் ஓயில்**

தயாரிப்பாளர்

26A, மானிப்பாய் வீதி, [C/4839] யாழ்ப்பாணம்.



**புளக் தயாரிப்பதற்கு தேவையான பொருட்கள் விற்பனைக்குண்டு**

* சின் சீற் (Zine Sheet)
* கமரா
* இரசாயனப் பொருட்கள்
* Litho Film

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
வலம்புரி
இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்


இப்பபத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 07.11.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.